

வஞ்சித்திணை

ஓம்
திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது


| | | |
|---|---|---|
| சிலம்பு ௭ | மெய்கண்டான்யாண்டு-எஎகூ சித்திரைத்திங்கள் 1929ஹூ ஏப்ரல்மூ—மேமூ | பரல் ௪ |


தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு
மம்மை யினுந் துணை யஞ்செழுத்துமே.

(சம்பந்தர்)

உரை:

தும்மல் இருமல்-தும்மல் இருமல்கள், தொடர்ந்த போழ்தினும்-வந்த காலத்திலும், வெம்மை-கொடுமையாகிய, நரகம் விளைந்த போழ்தினும்-நரகவாதனை ஏற்பட்ட காலத்திலும், இம்மை வினை-இப்பிறப்பில் வருவனவாகிய பிராரத்த கன்மங்கள், அடர்த்து-மேல் வந்து, எய்தும் போழ்தினும்-வருத்துங் காலத்திலும், அம்மை-மறுபிறப்பிலும், துணை-துணையா யிருப்பன, அஞ்செழுத்துமே-ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

தும்மல் இருமல்களும் வாதனையுடைய துன்பங்களா மாதலினு னும் தீயநிமித்தங்களா மாதலினும் இவை தொடர்ந்த போழ்தினும் எனக் கூறப்பட்டது.

"தும்மலோடருந்துயர்தோன்றிடினும்
அம்மலரடியலாலரற்றுதென்னு"

என வருந் தேவாரத்தையுங் காண்க. வெம்மை-கொடுமை, உயிர் போகப்பெறாது யாதனா சரீரத்தோடு மேலும் மேலும் புதிதுபுதி தாய் அனுபவிக்கப்படுங் கொடிய தன்மை. நரகவாதனையினுந் துணை யாவதை.

“ இருடருதுன்பப்படலமறைப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருடருகண்ணிழந்துண்பொருணாடிப்புகலிழந்த
குருடருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருடருகைகொடுத்தேற்றுமையாறனடித்தலமே ”

என்று அப்பமூர்த்திகளருளிய திருவிருத்தத்தா லறிக. (சு)

### பிழை திருத்தம்.

இவ்விதழில் உசம்வது பக்கத்திற்குப் பின்னுள்ள கசுக முதல் கடுசு வரையுள்ள பக்க எண்களை உசக-உடுசு ஆகத் திருத்துக.

## சைவமும் கடமையும்.

[உயர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

(கருடு-ம் பக்கத் தொடர்ச்சி)

**சைவ சமயம்** உண்மையில் எப்படிப்பட்ட தென்று அறிய முயல்பவர்கள் மிகச் சிலர். சைவ சமயத்தின் விரிந்த நோக்கத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவாதவர்கள் மிகப் பலர். ஆதலாற்றான் இக்காலத்தில் **சைவ சமயத்தைக்** குறை கூறுவதற்கு இடமுண்டாயிற்று. கடவுளுடைய பொதுத்தன்மையைச் சைவசமயம் தெளிவாக எடுத்து இயம்பியதுபோல வேறெச் சமயமும் விளக்கவில்லை.

‘அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்’ என்று மொழிந்த **தாயுமானவர்** சமயங்களைப்பற்றிப் பேசுமிடத்தே “**சைவ முதலளவில் சமயமும் வகுத்து**” என்றும் “**சைவ சமயமே சமயம்**” என்றும் அருளிச் செய்தமையால், சமயங்களுள் முதன்மையானது **சைவம்** என்பது அவரது கருத்து. “இராஜாங்கத்திலமர்ந்தது வைதிக சைவம்” என்றதும் அது. எல்லாச் சமயமும் நமக்கு இணக்கமான சமயமே. எல்லாக் குடிகளும் அரசனுக்கு இணக்கமானவைகளே. சைவ சமயம் எல்லாச் சமய

உண்மைகளையும் தழுவும் முறையில் தழுவிக்கொள்ளுவதால் அஃது ஒரு சமயத்தையும் இகழ்வதில்லை.

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தே,
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்பது அப்பர் திருவாக்கு. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு நிலையிலுள்ள உயிர்களின் மனநிலைக்குத் தக்கவாறு ஏற்பட்டு நிலவுவதற்குக் காரணம் கடவுளுடைய திருவுள்ளமே யாதலால் படிப்படியாகப் பல சமயங்களின் உதவிகொண்டு உயிர்கள் மேலான கதி யடையும் பொருட்டு அவைகளை இயக்குபவன் கடவுளே யாதலாலும் தாயுமான அடிகள்,

"வேறுபடு சமய மெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின்விளையாட்டல்லால்,
மாறுபடுங் கருத்தில்லை,"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

"அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய்" என்ற சித்தியாரிற் கூறியது காண்க. பட்டினத்தடிகள் பல சமயத்தார் தத்தங் கடவுள ரென்று கருதி வழிபடும் வடிவங்களெல்லாம் கடவுளின் திருவிளையாட்டு வடிவங்களேயா மென்றனர். அப்பனும் அம்மையுமாய் நின்ற வடிவம் நின்னதே. நள்ளிருளில் நடனஞ் செய்பவனும் நீயே, உளன் என்றும் இலன் என்றும் வழக்காடுவதற்கு இடமானவனும் நீயே, போதியினமர்ந்த புத்தனும், அசோகினமர்ந்த அருகனும் நின்வடிவங்களே என்று திருவொற்றியூர் ஒருபாவொருபதுள் அறிவுறுத்தினமை காண்க. கடவுளைச் சமயாதீதன் என்ற தாயுமானர் கருத்து மதுவே. எல்லாச் சமயங்கட்கும் தலைவனாய் அவற்றை எல்லாங் கடந்த பெரு நிலையுடைய கடவுளின் முழு இயல்பினை அறிதல் எளிதன்று எனினும் அக்கடவுளின் சில இலக்கணங்களை அறிதல் அவசியமாகும். கடவுள் பிறப்பு இறப்பில்லாதவர் என்பதே சைவர் கொள்கை. 'பிறவா யாக்கைப் பெரி

யோன் என்று **சிலப்பதிகார** ஆசிரியர் சிவபெருமானை விதந் தோதினர். பிற்காலத்துப் புலவர் ஒருவர்,

> " எல்லார் பிறப்பும் இறப்பும் இயற்பாவலர் தம்
> சொல்லாற் றெளிந்தேம் நஞ்சோணேசர்—இல்லிற்
> பிறந்த கதையுங் கேளேம் இப்பேருலகில் வாழ்ந்துண்டு
> இறந்த கதையும் கேட்டிலேன்."

என்றது காண்க. சிவபெருமான் **ஓங்கார** வடிவமாய்த் தோன் றியதையும், ஐம்பூதங்களிலும் கலந்திருப்பதையும் உருவக மாகப் பேசும் புலவர்களே **பிள்ளையார்** பிறப்பையும் **முருகப் பிரான்** பிறப்பையும் வர்ணித்தன ரென்று தெளிக. உண்மை யாகப் பிறக்கும் கடவுளரைக் கடவுள் என்று வழிபடுவது சைவக் கொள்கைக்கு மாறுனதாகும். உண்மைக்கு மாறுன பகுதி பிறசமயங்களிலிருந்தால் அதனை எடுத்துக் காட்டுவது இகழ்தலாகாது. சைவமொழிந்த பிற சமயங்களில் கடவுளுக் குப் பிறப்புக் கூறப்பட்டுள்ளது. பிருங்கு முனிவர் சாபத் தால் திருமால் பத்துப் பிறவி எடுத்தார் என்று **வால்மீகி ராமா யணமே** கூறுகின்றது. பிறப்புள்ள உயிர்கட்கும் பிறப்பில்லாத கடவுட்கும் உள்ள **வேற்றுமை** யறியாது **சுமார்த்த மதம்** (எகாத்துமவாதந்) கூறுகின்றது. பிறப்புடைய தெய்வங்க ளாகிய திருமால் அனுமார் முதலியவர்களேயே **மாத்துவ மத மும்** வழிபடுகின்றது.

**புத்த சமயத்திலே** புத்தருடைய பிறப்பு, வளர்ப்பு, இறப்பு தெளிவாக உரைக்கப்பட்டன.

**சமண சமயம்** தனது தெய்வத்துக்குப் பிறப்பு, இறப்புக் கூறுகின்றது.

**கிறிஸ்தவ சமயம்,** பிறந்திருந்த ஏசுவைத் தெய்வமென் கின்றது. பிறந்திருந்த வீரர்களேயும் பெரியோர்களேயுமே உலகி லுள்ள பல சமயங்களும் வழிபடுகின்றன. **சைவ சமயம்** அங் ஙனஞ் செய்யாமையால் அஃதொன்றே சிறந்த **ஆத்திக மதம்** என்று அறிக.

இனி, பிறப்பிறப்பில்லாத கடவுள் ஒருவனுலேயே உலக

மெல்லாம் அசைகின்றது. அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன் திருவருள்தான் யாவற்றையும் நடத்துகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலேயும் அவனது திருவருட் சத்தியே நடத்துவதால் அச்சத்தியின் ஏவலின் நின்று அச்சத்தியா லியக்கப்பட்டு ஒவ்வொரு தொழில் மாத்திரஞ் செய்யும் தெய்வங்கள் முழுமுதற் கடவுளாகாராதலின் மும்மூர்த்திகளும் கடவுள் அல்லர் என்று சைவ சமயங் கூறுகின்றது. மும்மூர்த்திகட்கும் தலைவன் சிவபிரான் என்று சொன்னதும் அக்கருத்தைப்பற்றி என்க. "மூவர்களும் நம்மவரே" "மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்றார் மணிவாசகனார். மூவரையும் மூவருக்குக் கீழ்பட்ட சிறு தெய்வங்கள் பலவற்றையும் தத்தம் அறிவிற்கு ஏற்றவாறு உண்மையாக வழிபடுகின்ற மக்கட்கு அவரவர் வழிபாட்டிற்கு ஏற்ற பயன் கொடுப்பது கடவுள் ஒருவரே. எத்தெய்வத்தை வழிபட்டாலும் ஒழுக்கத்துடனும் அன்புடனும் வழிபடவேண்டும். உலகப் பயன்களைப் பிறதெய்வ வழிபாடு வாயிலாகப் பெற்றாலும் பிறப்பில்லாத கடவுள் வழிபாட்டினாலேதான் எல்லையற்ற இன்பம் பெறலாம் என்று சைவ சமயம் போதிக்கின்றது.

"எவ்வவர் தம்மையேனும் யாவரே எனினும் போற்றி
அவ்வவருருவமாய் நின்றே அவர்க்கருள் செய்வாய் போற்றி
மெய்வரு தெளிவி லுன்னை வெளிப்பட உணர்ந்துளோர்க்குத்
தெய்வத போகமுத்தி சிறப்பொடு தருவாய் போற்றி"

என்பது கந்தபுராணம்.

ஞாயிறு முதலிய காட்சிப் பொருள்களனைத்தும் மாயா காரியமாகிய அறிவில் பொருளே. அப்பொருள் யாவும் அழியுந்தன்மை யனவே. பெரும் பொருளாகிய ஞாயிற்றின் மண்டலம் நாளடைவில் அளவு குன்றி வருகின்றதென்பது அறிவியல்நூலார் கொள்கை. ஒரு காலத்தில் அஃது இல்லாமற்போனால் அதன் ஒளி கொண்டு நிலவும் உலகனைத்தும் மாய்ந்தொழியும். அவ்வாறே எல்லாம் ஒழிந்த காலத்தில் எஞ்சி நிற்பது எல்லாவற்றையும் படைத்துக் காத்து

அழித்த கடவுளின் திருவருளே. ஆதலால், அத்திருவருளையே நாம் நாடி நிற்றல் வேண்டும். அதுவே, கடவுளுடைய திருவடியை வணங்குதலாகும். கற்ற கல்வியின் பயன் அஃதே என்பது நாயனார் கருத்து.

> கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்.

திருவருளை நாடுகின்றவர்கள் எல்லா உயிர்களிடத்திலேயும் அருளுடையராயிருத்தல் வேண்டும்.

கடவுள் உண்டென்ற கொள்கையே அருளொழுக்கத்திற்கு ஆதாரமானது. அருளொழுக்கமே எல்லா நல்லொழுக்கத்திற்கும் ஆதாரமானது.

> "வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
> வஞ்சித் தோமென்று மகிழன்மின்—வஞ்சித்த
> எங்குமுள னொருவன் காணுங்கொ லென்றஞ்சி
> அங்கங் குலைவ தறிவு"

என்றார் **குமரகுருபர சுவாமிகள்.**

கடவுள் உணர்ச்சி இல்லாதவர்கள் தாம் செய்யும் பிழையை ஒருவரும் அறியாமல் சுய நலத்திற்காகச் செய்தால் அவர்களைத் தடுக்கும் வழி யாதுமில்லை. ஆதலால் கடவுளை வைத்துத்தான் உலகத்தில் சன்மார்க்கத்தை நிலைநாட்ட முடியும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற **திருமூலர்** திருவாக்கின்படி உலகத்தில் நல்லொழுக்கத்தை நிலைநாட்டவேண்டும். **சமணரும்** புத்தரும் கடவுட் கொள்கை இல்லாதவராதலின் நல்லொழுக்கத்தை நிலை நாட்ட இயலாதவராயினர். தென்னாட்டில் கடவுள் இல்லை யென்று அவர்கள் சொன்னதை **சம்பந்தர்** மறுத்தொழித்தார். தென்னாட்டில் சமணர்க்கும் சைவர்க்கும் கடவுள் வழிபாட்டைப் பற்றியே வழக்கு நிகழ்ந்தது. நமது பரமாசாரியர் நால்வரும் கடவுள் கொள்கையை இந்நாட்டில் நிலைநிறுத்தினர்.

கடவுளை எளிதாக வழிபடுதற்குச் சாதனமாகிய உருவ வணக்கத்தையும் அவர்கள் நிலைநாட்டினர். கட்புலனாகாத அறிவைக் கட்புலனாகிய எழுத்து மூலமாகத்தான் அறிகின்றோம். அவ்வாறே காணமுடியாத கடவுளை அடையாளமாகிய வடிவவாயிலாகத்தான் கடவுளை நினைக்க முடியும். உருவத்தின் சம்பந்தமில்லாமல் ஒன்றையும் நினைக்க முடியாது. பேசவும் முடியாது. கோபமென்பது கோபக்குறிகளினாலேயே அறியத் தக்கதாயிருக்கின்றது. கோபத்தைப்பற்றி நினைக்குங் காலத்திலும் மனத்தில் கோபக்குறியே புலனாகின்றது. அதுபோலவே, அருவமாகிய கடவுளை நினைப்பதற்கும் உருவத்தின் உதவி வேண்டும். மனதில் சோதியாகக் கடவுளை நினைத்தாலும் அதுவும் ஒரு வடிவந்தானே. மனதில் நினைவு நிலைப்பதற்கு வெளியிலுள்ள பொருள்களின் துணைவேண்டும். ஆதலால் **உருவ வழிபாடு** இன்றியமையாததென்பது தெளிக.

எங்கும் நிறைந்த கடவுளை ஒருருவில் வழிபடுவது குற்றமென்பாருமுளர். பூதப்பொருள்களைக் கண்டவன் அவற்றோடு கலந்துறையும் கடவுளைக்காணும் நினைவு உண்டாவதில்லை. தூணையும் துரும்பையுங் கண்டவுடன் கடவுளை நினைப்பவர் யார்? கடவுட்கு என அமைத்த ஒரு குறியினைக் கண்டவுடன் கடவுளுடைய நினைவு உண்டாகின்றது. கடவுளை வழிபடுங்கால் உருவத்தை வழிபடுவதில்லை. உருவத்தின் வாயிலாகத் தெய்வத்தையே வழிபடுகின்றோம். சூடு எங்கும் நிறைந்திருந்தாலும் ஓரிடத்திலே கடைந்தெடுக்கும் நெருப்பே பயன் படுகின்றது.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

என்பது **அப்பர் தேவாரம்.**

கடையான அன்புடையார்க்கு விறகில் தீ போலவும், இடையான அன்புடையார்க்கு பாலில் நெய்போலவும், அவ

ரினும் உயர்ந்த தலையான அன்புடையார்க்குக் கடையாத மணியில் ஒளிபோலவும் இறைவன் வெளிப்படாது நிற்கின்ருன். அவன் வெளிப்பட வேண்டுமாயில் அன்பு என்னும் கோலிற் பிணித்த அறிவு என்னும் கயிற்றினல் மூன்ருந் தரத்தினர் முறுக வாங்கிக் கடைய வேண்டும். இரண்டாந் தரத்தினர் வாங்கிக் கடையவேண்டும். முதல் தரத்தினர் கடைதல் வேண்டும் என்பதே தேவாரத்துட் போந்த கருத்தாகும். இதுகாறும் சைவத்தின் சில முக்கியமான கொள்கைகளைக் கூறினேம்.

இனி, சைவர்களின் கடமைகளாவன:—சைவ சமயத்தின் உயர்ந்த கொள்கையையும், விரிந்த நோக்கத்தையும் சைவர்கள் ஒவ்வொருவரும் நன்கறிய வேண்டும். திருநீறணிந்த அளவில் சைவன் ஒருவன் ஆகிவிடமாட்டான்.

" மாலய னேடறியாத வண்ணமு முள்ளது நீறு "

என்ற திருவாக்கின் பொருளை ஒருவன் அறிவானயின் அவன் உலக நிலையாமை யுணர்ந்து வீடுபேற்றில் அவாவுடையவனுவான். "காடன், மாடன் போன்ற சிறு தெய்வங்களைக் கடவுளாக வழிபடுவோர் சைவர்களா கார்கள். "பூசனிக்காய் புடலங்காய் நீறு பூத்திருப்பது போல" இவர்கள் திருநீறணிந்தவராவார்கள். சிறு தெய்வங்கட்குக் கொடை கொடுப்போர் கடவுளின் சிறு வேலைக்காரர்கட்குக் கைக்கூலி கொடுப்பது போலாகும். இரக்கமின்றி உயிர்ப்பலி இடுவோர் தீய பேய் வழிபாடு செய்பவராவர். ஒழுக்கம் அருள் அன்பு முதலியன இல்லாதவர் எத்தெய்வத்தையும் வழிபடுதற்குத் தகுதியில்லாதவர் என்பதே சைவ நூற்கருத்து.

சைவத்தின் விரிந்த நோக்கத்தை யறிந்தவர்கள் புறச் சமயங்களை இகழமாட்டார்கள். பல சமயங்களின் கருத்தும் சைவத்தில் ஒருங்கு இயைந்திருப்பதை யறிவார்கள். நாத்திக மதமாகிய உலோகாயத மதமும் ஒருவகை நிலையில் உள்ளவர்கட்கு உரியதென்பதே சைவக் கருத்து. உலக இன்பத்தை ஒரு

வன் அவாவிச் சென்றால் அதற்குரிய முயற்சியை அவன் செய் வான். முயற்சியின்மையினும் முயற்சியுடைமை நன்மையாதல் காண்க. முயற்சியால் உலக இன்பத்தைப் பெறாதபோது அதனை வினைக்குத் தக்கபடி நல்கியும் நல்காதும் நிற்கும் கட வுள் உண்டு கொல் என்ற ஐய உணர்ச்சி நிகழும்.

அஃது ஆராய்ச்சி முடிவில் கடவுள் உண்டென்ற உணர்ச் சியை விளைவிக்கும். முயற்சியால் உலக இன்பம் பெறின் அதனை முற்றிலும் நுகர்ந்த ஒருவன் அதன் நிலையாமையையும் இழிவையுங் கண்டு அதனினும் உயர்ந்த எண்ணத்தை நாடுவன். அப்போது உயர்ந்த சமயத்துக்குரியவனாவான். ஆதலால் அச் சமயத்தையும் சைவம் அறவே ஒதுக்கவில்லை. அச்சமயம் நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்கள் உண்டென்று கூறு வது ஒப்புக்கொண்டு அதற்கு மேலும் வான் முதலிய தத்துவங் கள் உண்டென்று கூறுவது **சைவ சமயம்**. புத்தமதத்தார் அரு ளொழுக்கம் வேண்டுமென்று சொல்லுங்கால் அதனைச் சைவம் மறுப்பதில்லை. தானாய் இறந்ததையும் தின்னக் கூடாதென்றே சைவசமயம் சொல்லும். அவர்கள் ஞானமே ஆன்மா என்றால் ஞானத்தை யுடையது ஆன்மா என்று சைவசமயங் கூறும்.

**சமண சமயம்** உயிரும் உலகமும் உண்டென்று கூறுவதை ஒப்புக்கொண்டு அவற்றிற்கும் மேலாகக் கடவுளும் உண் டென்று சைவசமயம் மொழியும். **ஏகான்மவாத மதத்தார்** பரப்பிரமம் ஒன்றே உண்டென்றால், பரப்பிரமமும் உண்டு, அதற்கு வேறாய உயிரும் உலகமும் உண்டு என்று சைவம் இயம்பும். **கிறித்தவர்களும், மகமதியர்களும்** கூறுகின்ற கொள் கைகள் சைவ சமயத்திலும் உண்டு. அவர்கள் கூறாத மறுபிறவி யும் சைவ சமயத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதே. சில சமயங் கள் உருவ வழிபாடு வேண்டாமென்றால் அஃது உயர்ந்த ஞானி களுக்கு அத்துணை அவசியமில்லை யென்று சைவசமயங் கூறு கின்றது. சில சமயங்கள் சாதி வேண்டியதில்லை என்று சொன் னால் சைவ சமயம் சாதி முக்கியமில்லை; ஆசாரந்தான் முக்கிய மென்று கூறுகிறது. இவ்வாறு ஆராய்ந்து பார்க்குமிடத்து

பிறசமயங்களெல்லாவற்றிலுமுள்ள கொள்கைகள் சைவ சமயத்திலிருப்பதோடு அவற்றில் காணப்படாத அரிய உண்மைகளும் சைவ சமயத்திலுள்ளன வென்பது புலனாம். இதனையறிகின்ற சைவர்கள் ஏனை மதத்தாரோடு பகைமை கொள்ளமாட்டார்கள். சமயத்தின் உயர்வு தாழ்வுபற்றி அதனிற் பிறந்த மக்களை மதித்தல் தவறு. ஒழுக்கம் பற்றியே மக்களுக்கு உயர்வு தாழ்வு ஏற்படுதல் உரியது. சைவ சமயத்திற் புக விரும்பும் ஒருவன் வாழ்வினாலாகிய செருக்கும் வறுமையாலாகிய சிறுமையும் இல்லாதவனா யிருப்பதோடு தாழ்வென்னுந் தன்மையுடையவனா யிருத்தல் வேண்டும்.

> "வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பி
> தாழ்வெனுந் தன்மையொடு சைவமாஞ் சமயஞ்சாரும்
> ஊழ் பெறலரிது"

என்பது **சிவஞான சித்தியார்**. வாழ்வென்பது செல்வம் அதிகாரம் முதலியவற்றாலெய்துஞ் சிறப்பு. அவை இருப்பதினால் கெடுதி யாதுமில்லை. செல்வமும் அதிகாரமும் நன்முயற்சிக்குப் பெரிதும் பயன்படுவனவே. ஆனால், அவற்றால் செருக்கு ஏற்படுமாயின் அது தீமைக்கே ஒருவனைச் செலுத்தும். ஆதலால் வாழ்வு என்று வாளா கூறாது "வாழ் வெனுமையல்" என்றார். வறுமையும் அதனை உணர்கின்றவர்கட்கே கெடுதி விளைவிக்கும். "செல்வமென்றது சிந்தையின் நிறைவே" என்ற வண்ணம் வறுமையால் துன்புறாதவர்கள் சமய வாழ்க்கை நற்பயன் தருவதே. உண்மைத் துறவிகள் சமய வாழ்க்கையின் பொருட்டு வறுமையை மேற்கொண்டுள்ளார்கள். வறுமையால் வருந்துகின்றவர்களே தம்மையும் பிறரையும் தெய்வத்தையும் நொந்து உணவு முதலியன தேடுவதிலேயே கருத்தையும் காலத்தையும் போக்குவர். அவர் மனம் உயர்ந்த நெறியிற் செல்லாதாதலின் "வறுமையாஞ் சிறுமை தப்பி" என்றார். வறுமையினால் பொறாமையுண்டாகும், பொறாமையினால் ஒற்றுமைக் கேடுண்டாகும். ஆதலாலும் வறுமையை இடையூறாகக் கூறினர்.

செல்வ மில்லாத காலத்தும் தற்பெருமை பாராட்டுதலாகிய

செருக்கு பலர்க்கும் உள்ளதாதலின் அஃது ஒழிய வேண்டு மென்பார். 'தாழ் வென்னுந் தன்மை' என்றார் தாழ் வென் னுந் தன்மையில்லாத விடத்து முறண்பாடுங் கலகமும் விளை யும். தீயதை மறப்பதும் மன்னிப்பதும் தாழ்மையுடையார்க்கு எளிதாம். பணிந்த உள்ளமுடையாரே சைவ சமயத்தைச் சார்ந்தவராவர் என்றமையால் உண்மைச் சைவர் யாவரும் பொருட்செருக்கு இல்லாதவர்களாய்த் தாழ்மனம் உடையவர் களாய் இருக்கும் கடப்பாடுடையர்.

கடவுளுண்டென்னும் கொள்கையில் தலைசிறந்த சைவர் களுக்கு ஒருபுறம் எல்லாம் சடமே என்ற உலோகாயத மத மும், எல்லாம் அறிவே என்ற மாயாவாதமதமும் இடர்செய் வன. ஆதலின்.

"மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி"

என்றார் **மணிவாசகனார்.** இக்காலத்திலும் இவ்விரண்டு இடை யூறுகளும் உள்ளனவே. அம்மதங்களைச் சார்ந்தோர் **ஆலய வழிபாடு** முதலியவற்றை அறவே யொழிக்கக் கருதினும், சைவர்கள் ஆலயச் சீர்திருத்தத்தையே செய்ய முயலவேண்டும். சாதியினும் சமயத்தையே பாராட்டவேண்டும். கல்வி யறி வும் பக்தியும் ஒழுக்கமுமுடையவர்களையே கோயிலதிகாரிகளாக வும் வேலைக்காரர்களாகவும் பூசை புரிபவர்களாகவும் நியமிக்க வேண்டும். கோயில்களைத் தூய்மையாகவும் ஆசாரமாகவும் பிரகாசமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும். வீண் டம்பச் செலவுகளில் கோயில் பணத்தைச் செலவழியாமல் இன்றியமை யாத பூசனைச் செலவுகளுக்கும் சமய போதனைக்கும் சமயநூற் பாதுகாப்புக்குமே அதனைப்பயன்படுத்தவேண்டும். சமயநூல் களை ஆராய்ச்சி செய்து தகாத கருத்துக்களைக் கழித்து விட வேண்டும். இங்ஙனஞ்செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் செய்து சமயத்தைப் போற்றுவது நம்மவர் கடமையாகும். சமயமே நல்

லொழுக்கத்தையும் நாகரீகத்தையும் காப்பாற்றுவதென்று கருதுக. நமது சமயத்தை நிலை நாட்டிய பெரியோர்களை ஆராய்ச்சியில்லாமல் பழித்தல் கூடாது. அவர்களே நமக்கு உயிர்த் துணையாவரென்றறிக. அரன் மெய்யடியாரையும் ஆலயத்தையும் போற்றுக.

சைவத்தின் மேற் சமயம் வேறில்லை
அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லென்னும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும்
திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள்
எம் உயிர்த்துணையே.

---

# கருமை

## [திரு கபசம் எழுதியது]

(௩௯௲ம் பக்கத் தொடர்ச்சி)

ஏவற்றொழில் புரிவோர் தேய்பிறை நாளைத் தமது செய்திகளுக்குச் சிறப்பாகக் கொள்ளுதலாலும், கருநிறமுடைய விலங்குகளையும் பறவைகளையுஞ் செடிகளையும் தமக்குறு துணையாகக் கொள்ளுதலாலும், கருமைக்கும் அவர் தொழிலுக்குமுள்ள பொருத்தம் ஓரளவு தெளிவிக்கப்பட்டது. இப்பொருத்தம் மற்றொரு வகையாலும் உணர்த்தப்படும்.

மக்கள் நெருங்கிப் பெருங்கூட்டமாக வாழுந் தற்கால நகரங்களில், பேய்களைப்பற்றிய அச்சம் பெரும்பாலும் நிகழ்வதற்கில்லை. இரவில் நல்ல வெளிச்சமும் வேண்டுந் துணையுமுள்ள இடங்களில் அச்சத்தால் ஒருவரும் வருந்துவதில்லை. ஆனால் மலையுங் குகையுங் காடும் பெரு வெளியும் பாழிடங்களுமுள்ள நிலப்பகுதிகளில் சிறு கூட்டமாகக் குப்பங்களிலும், குறிச்சிகளிலும் வதியும் மக்கள் இரு

ளில் தனியே வெளிப்படுவாராயின், அலறி விழும் பேய்கள், குதித்துக் கூத்தாடுங் குறளிகள், உயிர்ப்பலி கேட்குஞ் சிறு தெய்வங்கள் ஆகிய இவற்றின் நினைவுகளால் அவர்கள் தாக்குண்டு வருந்துவார்கள். (மணிமேகலை சக்கரவாளக் கோட்டத்துள் நிகழ்ந்தது காண்க.) இதனால் நகர மக்களைக் காட்டிலும் நாட்டுப்புற மக்கள் பேய்களைப் பற்றி மிகுதியும் பேசுகின்றனர். பேய்கள் உண்டென்பதும், பொதுவாய் அவை கண்ணிற்குப் புலப்படுவனவல்ல வென்பதும் சிற்றூர் வாழ் மக்களிடையே பெரிதும் வழங்குங் கொள்கைகளாகும். அலகைகள் அல்லது பேய்கள் கண்ணிற்குத் தோன்றுவனவல்ல என்ற கருத்தை உட்கொண்டு நாட்டுப்புற மக்கள் அவற்றைக் 'காற்று' என்று பேசுகின்றனர், இஃதொரு புறமாக, கண்ணிற்குத் தெரியா வலகைகளின் மற்றொரு தன்மை, அவைகள் பெறும் வேறொரு பெயரால் வெளிப்படுகின்றது.

இப் பெயர்தான் கருப்பு. பயமறியாது இளங்கன்றுகள் போல் துள்ளித் திரியும் சிறுர்களை நோக்கித் தாய் தந்தையர், "அந்த இடத்திற்குப் போகவேண்டாம்; அங்கே காற்று, கருப்பு நடமாடும்'' என்று சொல்வதைப் பலர் அறிந்திருக்கலாம். காற்று கருப்பு என்ற இரு சொற்களும் பேய்களைக் குறிக்க ஒருங்கே வழங்கப்படுகின்றன. பேய்களைக் கருப்பென்பது யாது பற்றி? அவை மறைந்திருந்து மக்களை வருத்தும்; இருளில் வெளிவந்து துன்புறுத்தும். எதிர் பாரா வகையில் இன்னல் செய்யும் என்ற அகவிருட் புறவிருட் கருத்துக்களை உள்ளடக்கிக் 'கருப்பு' என்ற மொழி ஆட்சியில் வருகின்றதென்று சொல்லலாம். 'கருங்கைக்கொல்லர்' (சிலப்பதிகாரம், இந்திரவிழவு) 'கருவில்' (பெரும்பாணாற்றுப்படை 74) என வரும் சொற்றொடர்களின் பொருளுக் கிணங்க கருமை என்பதற்கு வலிமை, கொடுமை என்று பொருள் கொண்டு அதற்கிசைய 'கருப்பு' என்ற மொழிக்கு 'கொடுமை செய்யும் உருவிலிகள்' என்று உரை கோடலுங் கூடும். இங்ஙனம் பல வழிகளிற் கருமைக்கும், பேய்களுக்கும் ஒற்றுமை தோன்றுகின்றது. ஏவற்றொழிலிற் பெரும்பான்மை பேய்களினுதவி வேண்டப்படுதலின், அத்தொழிலை ஆங்கிலர் (Black magic) (கருமாயம்) என்று கூறுவது எத்துணை ஏற்புடைத்தென்பது விளக்கமாகின்றது.

கருப்பென்பது பேயைக் குறிப்பதன்றிப் பஞ்சத்தையுங் குறிக்கும். பஞ்சமென்ற பொருளில் இம்மொழி வடபகுதித் தமிழ் நாட்டிற் பெரிதும் வழங்குகின்றது. மழையின் மிகுதி, மழையின் மை எனும் இருமுதலாற் பஞ்சமென்பது விளையுமெனினும், பெரும் பான்மை பற்றி மழையின்மையால் நேர்வதையே பஞ்சமென்று சொல்லுகிறோம்.

பயிர் பச்சைகள் தீந்துபோதலே பஞ்சம்;
(தீந்துபோதல்=தீய்ந்துபோதல்=தீயினாற் சுடப்படல்) மழையின் மையாற் சூடு மிகுந்து பயிர்கள் அழிவதை 'கருப்பு' என்பதேன்? யாதாயினும் ஒன்று சுடப்பட்டால் அது கருநிறங் கொள்ளுமென் பது எவருமறிந்த உண்மை. 'தீந்து போயிற்று' என்பதிலுள்ள கருத்து. 'கரிந்து போயிற்று' என்பதிலுமுளது. கரிந்து போதல் கருப்பு நிறமாதல், ஆதலின், கருப்பு=பஞ்சம். (கரி என்ற பெயர்ச் சொல்லின் பொருளையும் நோக்குக.)

தீந்து போதலைப்பற்றி ஈண்டுப் பேச நேரிட்டமையின் அத னோடு பொருத்தமுடைய மற்றொரு பொருளை ஆராய்ந்து மேற் செல்லுதும். தீமை யென்பது தீயின் தன்மை. அதாவது, வெம்மை உள்ளத்தைச் சுடுந்தன்மையுள்ள சொல்லுஞ் செயலுந் தீமையின் பாற்படும். இங்ஙனமே நீர்மை என்பது நீரின் தன்மை, அதாவது, தண்மை. வெம்மை புரிபவரை வெய்யோர், தீயோர் என்றும், தண்மை செய்பவரைத் தண்ணர் என்றும் பேசுவது இயற்கையே. 'தண்ணர்' என்பது 'அம்' என்ற அடை பெற்று 'அந்தண்ணர்' என்றாகி, இடையிலுள்ள ஒற்றிழந்து 'அந்தணர்' என நிற்கும். (முக்கண்ணன் எனுஞ் சொல், முக்கணன் என வந்ததுபோல்) இங்ஙனமாகவும், அந்தணர் என்பது, அந்தத்தை (வேதாந்தத்தை) அணவி நிற்போர் என்று பொருள்படுமென **நச்சினார்க்கினியர்** நவின்றுளார். இது தமிழ்ச் சொல்லியல்பிற்கு முரண்படுவது. நிற்க.

பேய்க்குங் கருப்பிற்கு முள்ள இயைபை அறிந்த பின், அரக் கர் முதலிய அடங்காதார்க்குங் கருமைக்கும் தொடர்பேதாயினு முண்டோவென வினவுதல் முறையே. அரக்கர்களைக் குறித்துத்

தொன்னூல்களிற் கூறியவற்றிற் பல புலவோரின் புனைந்துரையே யாகுமெனினும், அவற்றிலு மங்குமிங்கும் அரிய கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன வென்பதை மறுக்கவும் மறக்கவுமியலாது. அரக்கர் அமரர் என பிரிவினராக நூல்களிற் கூறப்படும் மாக்களில் முன்னையோர் அழகும் ஒளியும் ஒழுக்கமும் உயர்வு முடையவராக வும், பின்னையோர் அருவருத்து அஞ்சத்தக்க உருவமும் உள்ளமு முடையவராகவுந் தோன்றுகின்றனர். இஃதன்றி, இவ்வரக்கர்கள் நடுங்கத்தக்கன செய்வோராகவும் இரக்கமின்றி உயிர்களை அழிப்பவ ராகவும் கடலில் ஒளிந்தும், விண்ணில் மறைந்தும் போர் செய்ய வல்லுநராகவும் பேசப்படுகின்றனர். இவ்வாறு பகரப்படுவனவெல் லாம் மெய்யென்று நாம்கொள்ள வேண்டியதில்லை. இவண் நாம் ஆராய்வதெல்லாம் மக்களுள்ளத்திலெழும் கருத்தேயன்றி, அக் கருத்து உண்மையோ, பொய்யோ என்பதன்று. ஆதலின், இங்கு நாம் கவனத்தில் வைக்க வேண்டியது அரக்கர் அல்லது அவுணர் என்பவர்களைப்பற்றி முற்காலத்தில் பலருக்கும் இக்காலத்தில் சிலருக்கும் இருக்குங் கருத்தேயாகும். இக்கருத்தை முன் கண்டோம்.

“ தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர் வந்திரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயஞ் செயவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலின் ”

(பாலைக்கலி : 2)

இதில் 'மாயஞ் செயவுணர்' என்று சொல்லி யிருப்பது கருத்தில் வைக்கற்பாலது, மாயஞ் செய்தலென்பது பிறர் உணரா முறை யிற் செய்திகள் நிகழ்தலாகும், இதைக் குறித்துப் பின்னர் விரிவா யெழுத விட்டிருக்கின்றமையின், முன் சொன்ன கருமாயத்தை நினைவிற் கொண்டு வந்து, ஈண்டுங் கருமை வந்தியைவதைக் காட்டுவதோடு நிறுத்துதும். அரக்கர்கள் கொடியவர்களென்ப தும், ஆற்றல் மிகுந்தவர்களென்பதும், மாயஞ் செய்பவர்களென் பது முண்மையாயின், இதற்கு முன் நாம் பார்த்தவற்றிலிருந்து, கருமை அவர்களுடன் ஒத்திருக்க வேண்டுமென்பது திண்ணம். ஆதலின், நூல்களெல்லாம் அவுணரைக் கரிய நிறத்தினராகவே தீட்டுகின்றன. கருநிறக் கடலில் ஒளிந்து போர் செய்திலும், கரு

முகிலில் மறைந்து வாளி தொடுத்தலும், அவர்களது தன்மைக்கு மிகப் பொருத்தமானவை.

கிறித்தவ மொழிப்போக்கில் தீயோரை 'இருளின் மக்கள்' (Children of Darkness) என்றும், நல்லோரை 'ஒளியின் பிள்ளைகள்' (Children of Light) என்றும் பேசுதல் முறை. ஒளிக்கும் இருளுக்குமுள்ள பகை, அமரர்க்கும் அவுணர்க்கும் நடந்ததாகக் கூறப்படும் பெரும்போர்களில் ஒருவாறு உருக் கொடுத்தமைக்கப்படுகிறது. இதுபற்றி அவுணரைக் கரியராக வும், அமரரைச் சிவப்பராகவுங் காண்கின்றோம். இஃது இந்திய நூல்களில் மாத்திரம் காணப்படும் மரபன்று; ஏறக்குறைய எல்லா மக்கட் பகுப்பினரின் நூல்களிலும், பல்வேறு வழியில் இருளுக் கும் (அறியாமை, அஞ்ஞானம்) ஒளிக்கும் (நல்லறிவு, ஞானம்) உள்ள பகை அவுணர்க்கும் அமரர்க்கும் நடந்த போராக வரையப் பெற்றிருக்கிறது. (தொடரும்)

---

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சுன்னாகம்

## திருவாளர். கு. ரு. சி. மாணிக்கத் தியாகராச பண்டிதரவர்களால் பாடப்பெற்ற

எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்னுலகை நிகர்தேவ கோட்டையெனு நன்னகர்
பொருந்துசீர்ச் சொர்ண மூர்த்திப்
புகழ்பெற்ற பெண்பாட சாலையுறு மாணவிகள்
பொலிவுகண் டவணெய் திநான்

எங்கிலத் தவருமெச் சுறுவண்ண மிவர்கற்ற
இணையில்கைத் தொழிலா தியா
மெத்திறக் கல்வியையு மாராய்ச்சி செய்தளவி
லிவர்கள்பே ரறிவின ரெனு

நன்னினைவு கொண்டனன் கற்பித்தவாசிரியர்
நம்மகாத் துமகாந் தியால்
நவில்ராட்டி னப்புலமை முருகனெனு மொப்பில்பேர்
நன்னு சொக்கையன் வன்மை

யென்னுமெழில் கண்டுமகிழ் வுற்றனனிங் கிதைநடத்
தேந்தலழ கப்ப வள்ளல்
எந்நாளும் வாழிமா ணவிகளா சிரியர்களு
மினிது நீடூழி வாழி.

---

# சீர்திருத்தக் குறிப்புகள்

[மறைமலை யடிகள்]

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை யம். எ., யம். எல். அவர்களும், சைவ சித்தாந்த மஹா சமாஜ அமைச்சர் திருவாளர் பாலசுப்பிரமணிய முதலியார் பி. எ. பி. எல். அவர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, இக் காலத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் சீர்திருத்தக் குறிப்புகள் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டுகின்றேம்.

## சமயம்

தென்னாட்டிலுள்ள தமிழர்களாகிய நாம் தொன்று தொட்டு ஒரே முழுமுதற் கடவுளை வணங்கி வருகின்றோம். அம் முழுமுதற் கடவுளுக்குச் சேயோன், மாயோன், முக்கண்ணன், என்னும் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. இச் சிறப்புப் பெயர்களாற் குறிக்கப்படாத போது, வாலறிவன், மலர்மிசையேகினன், வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயி லைந்தவித்தான், தனக்குவமை யில்லாதான், அறவாழி யந்தணன், எண்குணத்தான், இறைவன், கடவுள் என்னும் பொதுப் பெயர்கள் பொதுவாக எல்லாராலும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய கடவுள் பிறப்பிலாதது, இறப்பிலாதது, எல்லா மறிவது, எங்கு முள்ளது, எல்லாம் வல்லது, அளவிலாற்ற லுடையது, வரம்பிலின்ப முடையது என்னும் இலக்கணங்கள் உடைய தென்பது இத்தமிழ் நாட்டில் உள்ளவர்கள் எல்லாருக்கும் உடன்பாடாகும். இஃது எல்லாவற்றையும் படைத்து அழிக்கும் அப்பனாகவும், படைத்தவற்றைக் காக்கும் அம்மையாகவும் வணங்கப்பட்டு வருகின்றது. இத் தன்மைத் தாகிய கடவுளையே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும், மாணிக்க வாசகரும், திருமூலரும், அப்பர், சம்பந்தர், சுந்தரரும், மெய்கண்ட தேவரும் தாம் அருளிச் செய்த நூல்களிலும், பதிகங்களிலும் எடுத்து விளக்கி வணங்கி வந்திருக்கின்றார்கள்.

'மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான்'

என்றும்,

'தேவர்கோ அறியாத தேவதேவன்
செழும் பொழில்கள்
பயந்துகாத்து அழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்'

என்றும் மாணிக்கவாசகப் பெருமான் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளையே சிவ மென்னும் பெயரால் வாழ்த்தி வணங்கி யிருப்பது நன்கு விளங்கும்.

ஆனால், வட நாடுகளில் கோடிக்கணக்கான சிறு தெய்வங்களை வணங்கி, அவற்றுக்கு ஊனுங் கள்ளும் படைத்து வெறியாட்டு வேள்விகள் எடுத்த ஆரியர்கள் இத் தென்றமிழ் நாட்டுக்கு வந்து குடியேறித் தாம் வணங்கிய சிறு தெய்வ வணக்கத்தையும் அவற்றிற்காக எடுத்த வெறியாட்டு வேள்விகளையும், அச்சிறு தெய்வங்களின்மேற் கட்டிவிட்ட புராண கதைகளையும் இந் நாடுகளிற் பரவ வைத்தார்கள். இந் நாடுகளில் நாகரீகமும் கல்வியறிவும் இல்லாத கீழ் மக்களே ஆரியர் நடைகளை மிகுதியாய்ப் பின்பற்றலாயினர். அது கண்ட தமிழ்ச் சான்றோர்கள் ஆரியர் வணங்கிய சிறு தெய்வ இழிவும், தமிழர் வணங்கும் முழுமுதற் கடவுளாகிய சிவத்தின் உயர்வும் புலப்படுத்தல் வேண்டித் தாமும் பல புராண கதைகளை உண்டாக்கலாயினர். இவ்வாறு எழுந்த பல பல புராண கதைகளுட் கடவுள் இலக்கணத்துக்குப் பொருந்துவனவும், அதற்குப் பொருந்தாதனவும் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் செவ்வையாக ஆராய்ந்து பார்த்துப் பொருத்தமானவைகளை விளக்கி எழுதிப் பொருந்தாதவைகளை விலக்கி விடுவதற்கு உரிய சீர்திருத்தம் முதன்மையாகச் செயற்பாலதாகும்.

**புராணங்கள்**

நம் ஆசிரியர்கள் தமது காலத்திருந்த பொதுமக்களின் மனச்சார்பை அறிந்து, அவர்கள்பொருட்டுத் தழுவிப் பாடியிருக்

கும் புராண கதைகளை யெல்லாம் நாம் அப்படியே தழுவ வேண்டு மென்பது கட்டாயமாகாது. ஏனென்றால், அப்பனை வணங்கும் நமது சைவ சமயமும், அம்மையை வணங்கும் வைணவ சமயமும் இக்கதைகளைச் சார்ந்து பிழைப்பன அல்ல. இக்கதைகளின் உதவி வேண்டாமலே இவ்விரு சமயங்களும் மக்களின் இம்மை மறுமை வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அரிய பெரிய மெய்ப் பொருள்களினாலேயே அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆதலால், நம்முடைய சமயங்களின் உண்மைகளைச் 'சிவஞான போதம்' 'சிவஞான சித்தியார்' என்னும் உயர்ந்த அறிவு நூல்களின் விளக் கப்பட்டபடி இளம்பருவ முதற்கொண்டே நம்முடைய மக்களுக் குக் கற்பித்து வர ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இச்சமய உண்மைகளுள் எதனையுங் குருட்டுத்தனமாய் நம் பும் தீய வழக்கத்தை ஒழித்து, எதனையும் தம் மறிவால் ஆராய்ந்து பார்க்கவும், தம் மறிவுக்கு விளங்காதவைகளை அறிந்தோர்பாற் கேட்டுத் தெளியவும் அவாவை உண்டாக்குதல் வேண்டும்.

திருக்கோயில்கள்

சிவபிரான் திருக்கோயில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் சிவ லிங்க வடிவானது இறைவனது ஒளிவடிவாய் விளங்கும் அடை யாளத்தை உணர்த்துவதாகும். இவ்வடிவு எல்லாச் சமயத்தாரா லும் வழுத்தி வழிபடுதற்குரிய பொதுவான அடையாளமாகும். எந்தச் சமயத்தாரேனும் எந்தச் சாதியாரேனும் இதனை வணங்கு தற்கு விரும்பிக் கோயிலுள் வருவார்களாயின், அவர்களைத் தடை செய்யாமல், வந்து வணங்குதற்கு இடங்கொடுத்தல் வேண்டும்.

"என்மார்க்கம் இருக்குது
எல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும் வந்து
இறைஞ்சா நிற்பர்."

என்னும் தாயுமான அடிகளின் திருமொழியை நம்மவர்கள் எப் போதும் நினைவில் வைத்தல் வேண்டும். ஆனால் கோயிலுள் வரு பவர்கள் எல்லாரும் குளித்து முழுகித் துப்புரவான ஆடை

உடுத்து அடக்க வொடுக்கமாய் வாய்பேசாது உட்சென்று வணங்கும்படி செய்தல் வேண்டும்.

இப்போது கோயிலுள் இறைவனுக்குச் செய்யும் நாள் வழிபாடுகள் பொருத்தமாய் இருந்தாலும், அவை வடமொழி மந்திரங்களைச் சொல்லிச் செய்யப்படுதலின், பொது மக்கள் அவற்றின் உண்மை அறியாமல் விழிக்கின்றனர். தேவார திருவாசகங்களாற் பாடப்பெற்ற கோயில்களே பாராட்டப்படுகின்றன அல்லாமல், வடமொழி மந்திரங்களுக்காக எந்தக் கோயிலும் பாராட்டப்படவில்லை. ஆதலால், வழிபாடு முழுதும் தேவார திருவாசகத் தமிழ் மந்திரங்களைக் கொண்டே நடைபெறுமாறு ஒவ்வொரு கோயிலிலும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**திருவிழாக்கள்**

இனி ஒவ்வொரு கோயிலின் சார்பாக நடத்தப்பட்டு வரும் திருவிழாக்கள் எப்போதும் போலவே எங்கும் நடைபெறும்படி செய்தல்வேண்டும். ஏனென்றால், நாடோறும் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழப் பாடுபடும் ஏழைமக்களும், செல்வ மிகுதியாற் கடவுளை மறந்து சிற்றின்பத்திற் கிடந்துழலும் செல்வர்களும், இவ்விருவர் நிலையிலும் சிறிது சிறிது ஒட்டி நிற்கும் மற்றைப் பொது மக்களும் இத்திருவிழாக் காலங்களிலேதான் தத்தம் முயற்சிகளினின்றும் ஓய்வு பெற்று, நீராடி நல்ல ஆடை அணிகலன்கள் அணிந்து, தம் மனைவி மக்கள் சுற்றத்தாருடன் மனமகிழ்ந்து கடவுள் நினைவும் வணக்கமும் உடையராய்ப் பல ஊர்க் காட்சிகளையும் பல மக்களின் தோற்றங்களையும் கண்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று இன்புறுகின்றனர். இத்திருவிழாக்களும் திருக்கோயில்களும் இல்லையானால் இந்நாடும் ஏனைய அயல் நாடுகளைப் போல் ஓயாத சண்டைக்கு இடமான போர்க்களமாகவே இருக்கும்.

ஆதலால், திருவிழாக்களை இன்னும் செவ்வையான முறையில் நடைபெறச் செய்வதோடு, அத் திருவிழாக்களின் உண்மையும் பயனும் எல்லார்க்கும் எடுத்துச் சொல்லும்படி கல்வியில்

தேர்ந்த அறிஞர்களுக்குத் தக்கபடி பொருளுதவி செய்து, அவர்கள் அத் திருவிழாக் காலங்களில் ஆங்காங்கு விரிவுரை செய்யும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும்.

கோயில்களிற் பொதுப் பெண்டிரைத் தொண்டு செய்ய அமைத்தலும், அவர்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டுவதும் அடியோடு விலக்கப்படல் வேண்டும்.

கோயில்களில் வழிபாடாற்றுங் குருக்கள்மார் தமிழ்மொழியிற் பயிற்சி யுடையராயும், சைவ சித்தாந்தம் நன்குணர்ந்தவராயும், தேவார திருவாசகம் ஓதுபவராயும் இருக்கும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும். சில கோயில்களிற் றவிரப் பெரும்பான்மையான மற்றைக் கோயில்களில் வழிபாடு செய்யும் குருக்கள்மார்க்குத் தக்க வரும்படியும் தக்க சம்பளமும் இல்லை. ஆதலால், மிகுந்த வரும்படி உள்ள கோயில்களின் வருவாயிலிருந்து மற்றைக் கோயில்களின் ஏழைக் குருக்களுக்குத் தக்க சம்பளங்கள் கொடுப்பித்தல் வேண்டும்.

கோயில்களிலுள்ள இறைவன் திருவுருவத்திற்கு எப்போதும் போலக் குருக்கள்மாரே வழிபாடு செய்யவேண்டுமல்லாமல் வணங்கப் போகிறவர்களெல்லாம் அதனருகிற் சென்று அதனைத் தொட்டுப் பூசித்தல் வேண்டு மென்பது நல்லமுறை யன்று.

ஏனென்றால், வணங்கச் செல்பவர்களுக்குக் கடவுள்பால் உள்ள அன்பும் அச்சமுங் குறைந்துவிடும். அவ்விடமுந் தூய்மை கெடும். மக்களின் நெருக்கடியும் இடைஞ்சலைத் தரும். வணங்கச் செய்வோர்களில் இவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் என்று காட்டும் வேறுபாடுகள் அடியோடு நீக்கப்படல் வேண்டும்.

சில கோயில்களில் வரும் ஏராளமான வரும்படியிற் கோயிலின் இன்றியமையாத செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன போக மிச்சத்தைத் தேவார பாடசாலைக்கும், தனித்தமிழ்ப் பாடசாலைக்கும், சைவசித்தாந்த சபைகட்குந் தமிழ் சைவ சித்தாந்த முணர்ந்த ஆசிரியர்க்கும், தமிழ் நூல் எழுதுவார்க்கும், சைவ சித்

தாந்த விரிவுரையாளர்க்கும், கோயிலைச் சார்ந்த சத்திரஞ் சாவடி கட்கும் பயன்படுத்தல் வேண்டும்.

கோயிலின் வரும்படியைக் கொண்டு பார்ப்பனர்கட்கு மட்டும் உணவு கொடுத்தலும், ஆரியவேத பாடசாலை அமைத்தலும் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கட்குப் பொருளுதவி செய்தலும் அடியோடு நீக்கப்படல் வேண்டும்.

## மொழி

தென்றமிழ் நாட்டிலுள்ள நம்மனோர்க்கு உயிர்போற் சிறந்ததாகிய தமிழ் மொழியானது பல்லாயிர ஆண்டுகளாக உயிரோடு உலவிவரும் சிறப்புடையது. ஆரியம் முதலான பிறமொழிகளைப் போல் இறவாதது. ஆரியத்திலுள்ள கட்டுக் கதைகளைப் போல்வன சிறிதும் இல்லாதது. இயற்கைப் பொருள்களையும் மக்களின் அன்பு ஒழுக்கங்களையும், கடவுளையும், அடியார் வரலாறுகளையும் பாடின உண்மை நூல்களே நிரம்பி உள்ளது. சாதி வேற்றுமையினையும், ஒரு சாதியை உயர்த்தி ஏனைப் பல சாதிகளைத் தாழ்த்தி முறை யில்லாத விதிகளை வகுத்த ஆரிய நூல்களைப் போன்ற முறையற்ற நூல்கள் சிறிதும் இல்லாதது. கடவுளின் அருளைப் பெறுதற்கும், வாழ்க்கையின் நலங்களை அடைதற்கும், எல்லா மக்களும் ஒத்த உரிமை உடையரென வற்புறுத்தும் 'திருக்குறள்' 'பெரிய புராணம்' போன்ற உயர்ந்த ஒழுக்க நூல்களையே உடையது. ஆரியத்திலுள்ள கட்டுக் கதைகள் மலிந்த புராண நூல்கள் சிறிதும் இல்லாமற் கடவுள் நிலையினையும், உயிர்கள் நிலையினையும் நுணுக்கமாக ஆராயும் 'சிவஞான போதம்' போன்ற உயர்ந்த அறிவு நூல்களையே உடையது. இத்துணைச் சிறந்ததாகிய இத்தமிழ் மொழி எத்தகைய நுண்ணிய உயர்ந்த ஆழ்ந்த கருத்துக்களையும் தெரிவித்தற்கு இயைந்த சொல்வள முடையதாகலின், ஆரியம், ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களை இதன்கட் புகுத்தாமல் இதனையும் இதன் நூல்களையும் எல்லார்க்கும் தனிமையிற் கற்பித்தல் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டிற் செல்வர்களா யிருப்பவர்களும் பிறரும் தமிழ் மொழிப் பயிற்சிக்கும் தமிழ்க் கல்லூரிகள் அமைப்பிற்கும் பொருளுதவி செய்ய வேண்டுமே யல்லாமல், இவற்றை விடுத்து ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிப் பயிற்சிக்கும் அதற்குரிய கல்லூரி கட்குமே பொருளுதவி செய்தல் நன்றாகாது. தமிழ் நாட்டு மக்க ளெல்லாரும் தமக்குரிய தாய் மொழியிலேயே எளிதாகக் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்.

ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளிலுள்ள இயற்கைப் பொருள் நூல்களையும், உயிர் நூல்களையும், கடவுள் நூல்களையும் தமிழில் மிகுதியாக மொழி பெயர்த்து அவற்றைப் பயிலும்படி செய்தல் வேண்டும்.

சைவ மடத்தின் தலைவர்கள், அரசர்களுக்குள்ள பொருள் களினும் மிகுதியான பொருள்களை வைத்துக்கொண்டு பாவமான பல துறைகளிலும் அவற்றைப் பாழ்படுத்தி வருகின்றார்கள்.

சைவ சித்தாந்தமும் தமிழும் நன்குணர்ந்த அறிஞர்களோ தமது வாழ்க்கைக்கு வேண்டும் செலவுக்குத் தக்க வருவாய் இன்றிப் பெரிதுந் துன்புறுகின்றார்கள். இவ் வறிஞர்கள் மிக இடர்ப்பட்டு எழுதி வெளியிடும் நூல்களின் செலவுகளுக்குக் கூடப் பொருளுதவி செய்வார் எவரும் இல்லாமையின் அவர்கள் படுந் துன்பங்களுக்கு ஓர் அளவே இல்லை. ஆதலாற், சைவ மடங்களின் பொருள்களை இத்தகைய அறிஞர்க்கும், சைவ சித் தாந்தக் கல்லூரிகட்கும், தமிழ்க் கல்லூரிகட்கும் மிகுதியாய்க் கொடுத்துப் பயன்படுத்தல் வேண்டும்.

இந்திய நாட்டை ஆளும் அரசு அயலரசாய் இருத்தலானும், அவ் அரசினை நடத்துதற்கு உதவியாய் நிற்பாரிற் பெரும்பாலார் ஆரிய முறையைத் தழுவிய பார்ப்பனரா யிருத்தலானும், சைவ சமய வளர்ச்சிக்குந் தமிழ் வளர்ச்சிக்குந் தமிழ் உணர்ந்தார் செல விற்கும் அரசினரிட மிருந்து உதவி பெறுதல் இயலாதா யிருக் கின்றது.

இதனை உணர்ந்தாவது தமிழ் நாட்டு மன்னர்களும், சிற்றரசர்களும் சைவ சித்தாந்த உணர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் தமது பொருளைச் செலவு செய்தல் வேண்டும். ஆங்கில அரசினரால் போற்றி வளர்க்கப்படும் ஆங்கில மொழிப் பயிற்சிக்கே இவர்கள் தம் பொருளைச் செலவு செய்தல் சிறிதும் பயன் தராததாகும்.

இனிச் சைவ அவைகளும், தமிழ்க் கழகங்களும் வைத்து நடத்துவோர், தம்முடைய கழகக் கொண்டாட்டங்களுக்குச் சைவமுந் தமிழும் நன்குணர்ந்த அறிஞர்களையே வருவித்து அவற்றை நடத்துதல் வேண்டும். வெறும் பட்டங்கள் வாங்கினவர்களையும் ஆங்கிலம் மட்டும் உணர்ந்தாரையும் வருவித்து ஆரவாரம் செய்தல் பயன்படாது. தமிழ் அறிஞர்களை வருவிப்பார் அவர்கட்குத் தக்கபடி பொருளுதவி செய்தல் வேண்டும்.

இனித் திங்கள் இதழ், கிழமை இதழ், நாள் இதழ் நடத்துவோர் தம்முடைய இதழ்கட்குக் கட்டுரைகள் எழுதுந் தமிழ் அறிஞர்க்குத் தக்கபடி பொருளுதவி செய்தல் வேண்டுமேயல்லாமல், அவர்களை வறிதே துன்புறுத்தி அவர்கள்பால் வேலை வாங்குவது நன்றாகாது.

தமிழ் கற்றவர்கட்கு எல்லா வகையிலும் பொருளுதவி செய்து அவர்களைச் சிறக்க வைத்தால்தான் இந்நாடு முன்னேற்றம் அடையும். இவர்களைச் சிறக்கவையாமல், வேறு துறைகளில் எவ்வளவு செலவு செய்தாலும் இந்நாடு முன்னேற்றம் அடையாது. இதனை எல்லாரும் கருத்திற் பதித்தல் வேண்டும்.

## மக்கட் கூட்டம்

இப்போது தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களிற் பெரும்பாலார் எல்லாம் வல்ல ஒரு தெய்வத்தை வணங்காமல், இறந்துபோன மக்களின் ஆவிகளையும், பல பேய்களையும் இவைபோன்ற வேறு சில சிறு தெய்வங்களையும் வணங்கி, அவற்றுக்காகப் பல கோடிக் கணக்கான கோழிகளையும், ஆடுகளையும் வெட்டிப் பலியிடுகின்றார்கள். இக்கொடிய செயலை அவர்கள் அறவே விடுமாறு செய்து,

சிவம் அல்லது திருமால் என்னும் ஒரு தெய்வத்தையே வணங்குமபடி செய்தல் வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள மக்கள் ஊன் தின்பவரும் ஊன் தின்னாத சைவரும் என்னும் இருபெரும் பிரிவில் நின்றாற் போதும். சைவரிலேயே பல வகுப்புகளும், அங்ஙனமே ஊன் தின்பவர்களிற் பல பல வகுப்புகளும் இருத்தல், பொருளற்ற வேற்றுமையாய் ஓயாத சாதிச் சண்டைகளை உண்டாக்குவதாய் இருக்கின்றது. பொருளற்ற இவ்வேறுபாடுகளை முற்றும் ஒழிப்பதற்கு எல்லாரும் பெரு முயற்சி செய்தல் வேண்டும்.

ஊன் தின்னும் வகுப்பினரிலும் அருளொழுக்க முடையராய்ச் சைவ உணவு கொண்டு சிவத்தையே வணங்கும் அன்பு மிகுந்து தூயராய் வருவாரைச் சைவரா யிருப்பவர்கள் தம்முடன் சேர்த்துக் கொண்டு அவர்களோடு எதொரு வேறுபாடுமின்றி உண்ணல் கலத்தல்களைச் செய்தல் வேண்டும். கல்வியிலும் நுண்ணறிவிலும் சிவநேய அடியார் நேயங்களிலும் அருளொழுக்கத்திலும் சிறந்தார்க்கே உயர்வுகொடுக்க வேண்டுமே யல்லாமல் வெறும் பிறப்புப் பற்றி இவ்வியல்புகள் இல்லார்க்கு உயர்வு கொடுத்தல் ஆகாது. என்றாலும எவரையும் பகையாமல் அவரவர்க்கு வேண்டு முதவி செய்து எல்லாராடும் அன்பினால் அளவளாவுதல் வேண்டும். சத்திரஞ் சாவடிகளிலும், சிறப்பு நாட்களிலும் பிறப்பால் உயர்ந்தவரென்று சொல்லிக்கொள்ளும் ஒரு வகுப்பினர்க்கே உணவு கொடுத்தல், பொருள் கொடுத்தல் முதலிய அறங்களைக் குருட்டுத்தனமாய்ச் செய்கின்றார்கள். இதுவும் அறவே தொலைக்கப் படுதல் வேண்டும். உயர்வு தாழ்வு கருதாது அறஞ் செய்பத் தக்கார் எவரைக் காணினும் அவர்க்கு அறஞ் செய்தலே தக்கது.

மாணிக்கவாசகர் அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலான நம் சமயாசிரியர்கள் பௌத்த சமண மதங்களில் இருந்து சைவசமயம் தழுவ விரும்பினாரை அங்ஙனமே சைவ சமயத்திற் சேர்த்து அதனைப் பரவச் செய்திருக்கின்றார்க ளாதலால், நம் ஆசிரியர் காட்டிய அந் நன்முறையைக் கடைப்பிடித்து நாமும் அயற்

சமயத்திலிருந்து வருவாரை நம்முடன் சேர்த்துக்கொண்டு எவ் வகை வேறுபாடுமின்றி அளவளாவுதல் வேண்டும்.

இவர் தீண்டத் தக்கவர், இவர் தீண்டத் தகாதவர் என்னும் போலி வேறுபாடுகளை அறவே ஒழித்துக் கோயில்களிலும் கல் விச் சாலைகளிலும் எல்லார்க்கும் ஒத்த உரிமை கொடுத்தல் வேண் டும். இதற்கு இன்றியமையாதனவான சைவ உணவு எடுத்தல், குளித்து முழுகித் துப்புரவாய் இருத்தல், நோய்க்கு இடங் கொடாமை முதலான நலம்பேணும் முறைகளை எல்லாரும் உணர்ந்து நடக்கும்படி, அவற்றைத் துண்டுத் தாள்களிலும் விரி வுரைகளிலும் ஆங்காங்குப் பரவச் செய்தல் வேண்டும்.

கல்வியிலும் உடம்பு நலத்திலும் நல்லொழுக்கத்திலும் மேன் மேல் உயர்வதற்குப் பெருந் தடையாய் உள்ள சிறு பருவ மணத்தை அறவே ஒழித்தல் வேண்டும். பெண் மக்களுக்கு இருபதாண்டும் ஆண்மக்களுக்கு இருபத்தைந் தாண்டும் நிரம் பும் முன் அவர்களை மணஞ் செய்வித்தல் ஆகாது. அங்ஙனம் மணஞ் செய்யுமிடத்தும், ஒருவரை ஒருவர் அன்பு பாராட்டுதல் அறிந்து அதன்பின் அவர்களை மணம் பொருத்தல் வேண்டும். ஆணையாவது பெண்ணையாவது ஆடு மாடுகளைப்போல் விலை கொடுத்து வாங்குங் கொடிய வழக்கத்தை வேரோடு களைவதற்கு எல்லாரும் மடி கட்டி நிற்றல் வேண்டும். ஏனென்றால், அன்பில் லாத வாழ்க்கையால் வருந் தீமைகள் அளவில்லாதவைகளாய் இருக் கின்றன. அன்பில்லாத சேர்க்கையிற் பிறக்கும் பிள்ளைகள் குறு கிய வாழ்நாளும் பல தீய தன்மைகளும் உடையவாய் இருக்கின் றன. அன்பு வளர்ச்சிக்கு ஏதுவாக ஆண்மக்களும் பெண் மக் களுங் கள்ளங் கபடின்றி நடமாடச் செய்தல் வேண்டும். பெண் மக்களைக் கல்வியிலும் நன்முறையிலும் பழக விடாமல், மணங் கூடும் வரையில் அவர்களை அறைகளில் அடைத்து வைப்பது பெருந் தீமைகளை விளைவிக்கின்றது. பெண்மக்களைப் பெரும் பாலும் தமிழ் முதலிய தாய்மொழிக் கல்லூரியிலேயே கல்வி பயிற்றுவித்தல் வேண்டும். உணவமைத்தல், இல்லறம் நடப் பித்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலிய முறைகளில்

தேர்ச்சி பெறவேண்டுவது பெண் மக்களுக்கு இன்றியமையா தாகும். ஆண் மக்கள் தாய் மொழியோடு மற்ற மொழிகளையும் நன்கு பயிலச் செய்தல் வேண்டும்.

முப்பதாண்டுகட்கு உட்பட்ட பெண்கள் கணவனை இழந்து விடுவார்களானால், அவர்களைத் திரும்ப மணஞ் செய்து கொடுத்தல் வேண்டும். ஆண்மக்களில் நாற்பதாண்டுக்கு மேற்பட்டவர்கள் இளம் பெண்களை மணஞ் செய்தல் ஆகாது. அப்படிச் செய்ய முந்துகின்றவர்களை எல்லா வகையாலும் தடை செய்தல் வேண்டும். நாற்பதாண்டுக்கு மேற்பட்ட ஆண்பாலர் மணஞ் செய்து கொள்ள வேண்டுவார்களானால் தம் ஆண்டுக்கு ஏறக்குறைய ஒத்த கைம்பெண்களையே அவர்கள் மணஞ் செய்துகொள்ளும்படி தூண்டுதல் வேண்டும்.

தமிழ் மக்களிற் பெரும்பாலார் ஒருவர்பாலுள்ள குற்றங்களை மற்றவர் எடுத்துப் பேசுபவராய்ப் பகைமையையும் மன வருத்தத்தையும் பரவச் செய்து வருகின்றார்கள். இத்தீய பழக்கத்தை ஒழித்தால் அன்றித் தமிழ் மக்கள் முன்னேற்ற மடைவது சிறிதும் முடியாது. ஒருவர்பாலுள்ள குற்றங்களை மறைத்து, அவர்பாலுள்ள நலங்களை எடுத்துப் பேசுவதற்கே எல்லாரும் விடாப்பிடியாய்ப் பழகுதல் வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்ற உதவியை மற்றவர்களுக்கு மனமாரச் செய்து, அவர்களை மேல் உயர்த்திவிடுதல் வேண்டும். தாம் செய்யும் உதவிக்குக் கைம்மாறுவ தொன்றை எதிர்பார்த் திருத்தல் ஆகாது. அப்போதுதான் நம்முடைய மக்கள் உண்மையான முன்னேற்றத்தை அடைவார்கள்.

# பொருநை நாட்டுப் புலவர்கள்

[திரு M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B.A., L.T.]

## பொருநை

பொன்னி காவிரி போன்று பொருநை, தாம்பிரவர்ணி என்ற பெயர்கள் ஒரு பொருள் குறிக்கும் இருபெயராகும். 'பூந்தண் பொருநைப் பொறையன் வாழி' என்பது சிலப்பதிகாரம் 23-வது கட்டுரைகாதை 83-வது அடியாகும். புறநானூறு 11,387 - ம் பாட்டுகளில் முறையே,

> ' தண்பொருநைப் புனற்பாயும்
> விண்பொருபுகழ் விறல்வஞ்சி '
>
> ' வஞ்சிப் புறமதி லலைக்கும்
> கல்லென பொருநை மணலிலும் '

என்று காணப்படும் அடிகளில் பொருநையாறு கருவூர்ப் பக்கலிற் செல்லுமென்று உரைகாரர் கூறியுள்ளர். கருவூராயினும், வஞ்சிக் களமாயினும் இரண்டும் சேர நாட்டிலுளவெனப்படும். பொறையன் சேர அரசனைக் குறிக்கும். திருநெல்வேலி ஜில்லாவின் மேற்பாகம் சேரன்மாதேவி வரையிலும் சேர நாடாகவிருந்து ஆங்கில வாட்சியில் நெல்லையம்பலத்துடன் சேர்க்கப்பட்டது. பின்னர் அப்பெயர் தாம்பிரவர்ணிக்கு மறு பெயராயிற்று. சில ஆராய்ச்சியாளர் தாமிரவருணி என்ற பெயர் 'தண்பொருநை' என்பதன் திரிபு என்று கூறுவர், திருநெல்வேலிப் புராணத்தில் பொருநை என்ற பெயர் தாமிர வருணிக்கே வழங்கப்பட்டுளது.

> " உம்பரர் தமக்கு மேலோன் உவந்துதன் னிடத்திற் கொண்ட
> அம்பிகை கரத்திற் றோன்றி அகத்தியர் கரத்தி லேந்தும்
> செம்பிடை வதிந்து தென்பால் திகழ்மலை யிருந்து பூவிற்
> பம்பிய வளத்தி னோடிப் பயன்றரும் பொருநை வாழி "

இச் செய்யுளில் மேற் கூறிய ஆற்றின் துவக்கமுங் கூறப்பட்டுளது.

---

* இத் தலைப்புடைய சொற்பொழிவு, 1929-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22ஆம் நாள் திருநெல்வேலி நகரில் ஜூபிலி ஹாலில் நிகழ்ந்தது.

பொருநை நாட்டில் எண்ணிறந்த புலவர்கள் தோன்றித் திகழினும் பல துறைகளிலும் புகழேந்திப் புலமை வாய்ந்த புலவர்கள் சிலரே யாவர். ஆதலால் இன்று சிற்சில பாவலர்களைப் பற்றிச் சிறிது இயம்பலாகும்.

### 1. திரிகூடராசப்பக் கவிராயர்

மேற்றிசைக்கண் **மேலகரத்தில்** மலையிலக்காக விளங்கிய புலவர் **திரிகூட இராசப்பக் கவிராயர்.** இவர் ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகளின் முன்னர்த் திகழ்ந்த தாயுமானவர் காலத்தவர். விக்ரமசிங்கபுரத் துதித்த சிவஞான முனிவர்களின் முன்னோராகிய நமச்சிவாயக் கவிராயரின் காலத்தவருமாவர் மதுரை மாநகரி விருந்தாண்ட முத்து விசயரெங்க சொக்கநாதர் நாய்க்கர் காலத்திலிருந்தவ ரென்பது 1718-ல் இப்புலவருக்கு அம்மன்னன் அளித்த நஞ்சை நிலமாகிய **குறவஞ்சி மேடு** என்னும் நன்கொடை சான்றாகும். இந் நன்கொடை புலவர் பெருமானின் எழுபதாம் ஆண்டில் அளிக்கப்பெற்ற தென்பர். அங்ஙனமாயின் நம் கவிராயரவர்கள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் பிறந்து பதினெட்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்து வந்தனரென்பது வெளிப்படை. நஞ்சை நன்கொடை நம் புலவராக்கிய குற்றாலக் குறவஞ்சியின் நயத்தை உணர்ந்தே அரசன் அளித்தனன் என்பர். இக் குறவஞ்சியின் பெருமை தஞ்சை மன்னனாலும் மதிக்கப் பெற்றுத் தஞ்சையிலுள்ள சிவாலயத்தில் ஆண்டு தோறும் நிகழும் நவராத்திரி நாட்களில் மக்கள் இன்புறுமாறு நடித்துக் காட்டுவான் வேண்டி நேரிடும் செலவுகட்காக நிலமளிக்கப்பட் டிருக்கின்றது. பல வஞ்சிகள் இருப்பினும் குற்றாலக் குறவஞ்சியே தலைசிறந்த தென்பர். நம் புலவராக்கிய நூல்கள் பதினான்கு; அவை குற்றால நாதரை யொட்டியே பாடப் பட்டிருத்தலால் குற்றாலக்கோயில் வித்வான் என்றபட்டப்பெயரை நம் கவிராயர் தாங்கி வந்தனர். பதினான்கு நூல்களாவன:—குற்றாலக் குறவஞ்சி, குற்றாலத் தலபுராணம், குற்றால மாலை, சிலேடை வெண்பா, யமக வந்தாதி, உலா, ஊடல், பரம்பொருள் மாலை, கோவை, குழல்வாய் மொழி கலிப்பா, கோமள மாலை, வெண்பா

அந்தாதி, பிள்ளைத்தமிழ், நன்னகர் வெண்பா என்பனவாம். இவற்றில் முதன் மூன்றுமே வெளியிடப்பட்டுள.

குறவஞ்சி குறவன் குறத்தி பாட்டாகும். சிங்கன், சிங்கியின் வருணனையும் வசந்த வல்லியின் சிறப்பும் பொலிந்து விளங்கும், குறத்தி குறி சொல்லிப் பெற்ற பரிசுகள் பலவாம், அகத்திணைப் பொருளாகிய அன்பு இவ்விருவருக்கு முள்ளதை இறைவனுக்கும் மன்னுயிருக்கு மிருப்பதாக விளக்கி வீடு பேற்றினுக்கு வழி சிற்றின்பமே என்ற உண்மை வற்புறுத்தப்பட் டிருக்கின்றது.

குற்றாலம் குறுகிய ஆலம். குறும்பலா குறுகிய பலாமரம். இவ்விரண்டு பெயராலும் திருஞான சம்பந்தர் அருமையான இரு பதிகங்கள் பாடியுளர். ஆலமரத்தை மருவி வரும் அருவி வட அருவி யெனப்படும்.

"கதிகட்கெல்லாம், நாலேணி நிறுத்திய தாம்: திரிகூட வடவருவி நுவலுங் காலை," என்றும், 'வானோராட்டுங் கூடமார் மஞ்சனம் போலும் திரிகூட வடவருவிக் கடவுள் தீர்த்தம்' என்றும், 'தீவினையைக் கழு நீராப் பிரித்தெறியும் திரிகூடத் தெய்வக் கங்கை' என்றும் புகழப்பட்டது அருவிக் கங்கைத் தீர்த்தம். குற்றால மென்ற பெயரை ஒருவர் நினைப்பின் அவருடைய பாவங் கோடி தீருமென்றும், ஒருவர் உரைப்பின் ஒரு கோடி புண்ணியமாமென்றும், குற்றாலத்திற் செய்யும் ஒரு தவம் அனந்த கோடியாகப் பெருகுமென்றும், அதனில் தொழுவோர்க்குப் பரம பதங் கூடுமென்றும், குற்றாலத்தின் பெருமை வரையப்பட்டுளது.

## 2, சிவஞான முனிவர்

பாவ நாசத்திற் கடுத்துள ஊர் விக்ரமசிங்கபுரம். அவ்வூரின் பெயர் விளக்க முற்றது முக்களாலிங்க ரென்ற சிவஞான முனிவராலேயாம். இவர் தந்தை ஆனந்தக் கூத்தர். தாய் மயிலம்மை. சிறு வயதிலேயே திருவாவடுதுறைத் தம்பிரான் மார்களைக் கண்டு விருந்தோம்பி அவ்வாதீனத்திற் சேகி நமசிவாய மூர்த்திகளைக் குருவாக ஏற்றுக் கல்வி பெற்று, வேலப்ப தேசி

கரை ஞானசிரியராகக் கொண்டு சமய நூல்களைப் பயின்று தேர்ச்சி யடைந்து அவ்வாதீனப் பெருமையை விளக்கினர். தென் மொழியன்றி வடமொழியிலும் வல்லுநர். இவ்விரு மொழிகளி லும் அவருக்கிருந்த புலமையை இவராலாக்கப் பெற்ற நூல்களே துலக்கும். இலக்கண விருத்தி, சூருவளி திருத்தம், காஞ்சிப் புராணம், முதுமொழி வெண்பா, ஏகம்பர் முல்லை வாயில், கலைசைப் பதிற்றுப்பத்து, இளசை அந்தாதி, கச்சியானந்த ருத்ரே சர், செப்பறைப்பதி அகிலாண்டேஸ்வரி பதிகங்கள், ஏகம்பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர் விநாயகர், அமுதாம்பிகை பிள் ளைத் தமிழ்கள், திருத்தொண்டர் திருநாமக் கோவை, நமச்சிவாய மூர்த்திகள் மாலை, தருக்க சங்கிரகம், தீபிகை (அன்னம் பட்டீயம்) சிவஞானபோத மகா பாஷியம், சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபட்சவுரை, சித்தாந்தப் பிரகாசிகை (மொழி பெயர்ப்பு) வயிரக் குப்பாயம், சிவசமவாதவுரை மறுப்பு, சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பு, சிவ தத்துவ விவேகம், திருவாவடுதுறை மரபு அட்ட வணை மறுப்பின் மறுப்பு முதலாயின. இவர் பன்னூல்களை ஆக்கியது மன்றிப் பன்னிரு மாணவர்கட்கும் பாடமோதி வந்தனர். அவர்களிற் காஞ்சிப் புராணம் இரண்டாவது காண்டம் பாடி முடித்த கச்சியப்ப முனிவர், இலக்கணம் சிதம்பர நாதமுனிவர், பன்னூல்களுக்காசிரியராகிய தொட்டிக்கலை சுப்பிரமணியர், காஞ்சி சரவண பத்தர், சிதம்பரப் பத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை முதலானவராம்' ஒவ்வொருவரும் பெரும் பெயர் பெற்றவ ராவர்.

சிவஞான முனிவரின் பெருமை அளத்தற்கரிது. பல துறை களிலும் பெயர் வாங்கினவர். இலக்கணம், தருக்கம், புராணம், மொழி பெயர்ப்பு, சமய நூல், உரை வரைதல், மறுப்பு இவை சிலவாம். வடமொழித் தேர்ச்சியுள்ள முனிவர் சிறிது வட மொழி பயின்ற சிறார்போ லல்லாமல் மொழிபெயர்ப்பதில் தமிழ்ச் சொற்களையே சிறந்து வழங்குவதைக் காணலாம். வட மொழிக் கடலென்பது 'பாடிய' முதலான உரை நூல்களிற் பார்க்க லாம். யமகம், திரிபு, சிலேடை, அலங்காரம் முதலான யாப்படி

வித்தை அந்நாளிற் சிறப்புற்றிருந்தமையால் நம்முனிவரும் அவ் வகையிற் கைதேர்ந்தவரே. சோமேசர் முதுமொழி வெண்பா ஒன்றுமே நம்மாணவர்கட்கு நற்புத்தி புகட்டுவதற்கான நூலாகும். 133 குறளை அதிகார முறைப்படி எடுத்துக் காட்டுகளுடன் வெண்பாவிற் றந்துளார். விரிவஞ்சி இத்துடன் நிறுத்துவாம். அவர் ஏறத்தாழ 140 ஆண்டுகளின் முன்னர் இருந்தவராவர். 'விசுவாச வருட மேடமதி' யென்பர்.

### 3. நமச்சிவாயக் கவிராயர்

மேற்கூறிய **நமச்சிவாயக் கவிராயர்** திரிகூட ராசப்பக் கவிராயர் காலத்தவரென்றேம். நபாபு ஒருவர் வந்திருந்த பொழுது பாபநாசம் உலகம்மையின் கையிலிருந்த பூச்செண்டைத் தன் கை வசம் வரும்படி பாடித் தன் அருட்டிறத்தைக் காட்டின ரென்பர். அத்தலத்தின் மீது உலகம்மை பிள்ளைத்தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, சந்த விருத்தம், மாலை, சிலேடை வெண்பா முதலான நூல்கள் அவராலாக்கப்பட்டன.

### 4. பரிமேலழகர்

குறள் உரையாசிரியரிற் சிறந்தவ ரென்று பாராட்டப்படுபவர் கடையம் பதியில் பரிமேலழகர். இவர் செனன வீரப்பய்யருடைய மாணுக்கர். குருவின் வாக்குக் கிணங்கி இவர் சான்றோர் கட்குக் குருக்க ளாயினர் என்றும், ஆத்ம ராமாயணம், ஞானக் குறவஞ்சி என்ற நூல்களுக்கு ஆசிரியராயுள்ள **குமர குருபர தேசிகர்** இவர் குரு பரம்பரையில் பதினைந்தாவது குரு வென்றும், அருணசலக் குருக்கள் அவர் பின் வந்தவ ரென்றுந் தெரிகின்றது. 'பரித்த வுரை யெல்லாம் பரிமே லழகன் தெரித்த வுரையாமோ தெளி' என்று புனைந்துரைக்கப் பெற்ற உரையாசிரியர் காஞ்சிபுர வைணவ ரென்று, "அரிமே லன்புறாஉம் அன்பமை யந்தணன்" என்ற ஆன்றோர் வாக்குகளால் துணியப்படு மென்பர். இவர் உரையில் இவர் பயின்ற வடமொழி நூல்களின் கருத்தையே வள்ளுவரும் அமைத்துள ரென்றெண்ணிக் குறள்களைத் திரித்து வலிந்து பொருள் கொண்டுள ரென்றும், கடவுள் வாழ்த்து, புதல்வரைப்

பெறுதல் என்ற அதிகாரத் தலைப்புக்கள் இவருடைய சொந்த மென்றும் இன்னோ ரன்ன குறைபாடுகள் கூறுவாரு முளர். இறை வணக்கம், மக்கட் பேறு என்றிருத்தல் பொருந்து மென்றும், 'கற்றதனாலாய பயனென் கொல்' 'மலர் மிசை யேகினான்' 'கேட்ட தாய்' 'குடம்பை தனித்தொழிய' என்ற தொடர்களுக்கு இவருரைத்த வுரை தமிழர் ஒழுக்கங்கட்கு அடுத்தன வல்லவென்றும் கூறுவது வழக்கம்.

## 5. இராமநாதன் கவிராயர்

ஆழ்வார் குறிச்சியில் இராமநாதன் கவிராய ரென்பவர் அவ்வூருக்கு அணித்தாயுள்ள சிவ சைலேஸ்வரர் கருணை பெற்றுச் 'சிவசயிலப் பள்ளு' என்ற சிறு நூலை இயற்றியதாக அறிகின்றோம். அதில் அழகப்ப முதலியாரென்ற சீமான் பெருமையை அவருடைய அடிமைப் பள்ளரும் பள்ளிகளும் விதந்தோதியுளர்.

## 6. இனைய நயினார்

பள்ளு என்ற நாடக வகையினிற் சிறந்தது 'முக்கூடற் பள்ளு' என்பதாம். இதனை ஆக்கியோர் இனைய நயினாரென்ற முகம்மதியர் என்று அறிகிறோம். இதிலுள்ள மழைக்குறி முதலான சில பாடல்களை யாம் தமிழ்ப் பள்ளியிற் பாடமாகப் படித்த துண்டு.

## 7. வடமலையப்ப பிள்ளையன்

இப் பள்ளியில் வடமலையப்ப பிள்ளையன் என்ற பெரியாருடைய சீரையும் சிறப்பையும் அவருடைய பள்ளிகள்எடுத்துரைக்கின்றனர். சீவலப் பேரி யென்ற ஊரிலுள்ள கோட்டைஅழிவதற்கு அம் மகான் செய்த பராக்கிரமங்களை உலகம் நன்கறியும். இப் பிள்ளை யவர்கள் மதுரை நாயகர் வம்சத்தவருக்கு மந்திரியாயிருந்து பாளையக்காரரிடம் தண்டல் செய்ய இவண் ஏகினரென்று கதை கூறும். இவரால் ஆக்கப் பெற்ற நூல்கள் இரண்டும் வெளி வந்துள. பதினெண் புராணங்களில் தலைமை பெற்ற 'மச்சபுராணத்தைத்' தமிழ் மொழிப்படுத்திய தொன்று. குறள் அடிகளை யமைத்துப் பாடப் பெற்ற 'வடமலை வெண்பா' என்றது மற்றொன்று. நமது நண்பர் காலஞ் சென்ற திருவாளர் சுப்ரமண்ய பிள்ளையின்

வேண்டுகோளுக்கிணங்க எமது விருப்பத்தைச் சென்னைத் தாம் ஸன் கம்பெனியார் மறுக்காமல் தம் செலவில் 'மச்சபுராணத்'தை வெளிப்படுத்தினர்.

### 8. குமாரசாமி தேசிகர்

**வீரவ நல்லூரில்** மாறி யாடும் பெருமாள் சோதிடரின் தோன்றலாகிய குமாரசாமி தேசிகர் தந்தையிடம் சோதிடங் கற்று மூல காண்டம், சாதக காண்டம், முகூர்த்த காண்டம், சிந் தனு காண்டம் என்ற நான்கு காண்டங்களுள்ள' குமார சுவாமீயம்' என்ற அரிய பெரிய நூலை ஆக்கினர். இந்நூலில் 45 படலமும்' மொத்தமாக 4312 செய்யுளும் உள்ளன.

### 9. நெல்லையப்பன் கவிராயர்.

**திருநெல்வேலி** நகரில்,

'சாகித்தியம் வல்லார் சங்கீதம் வல்லார்கள்
மோகித் துனையுற்று மொய்ப்பவர்கள்—சோதித்தே
எல்லையற்ற துன்புற வெங்கேய்ந்தாய் கவிராச
நெல்லையப்ப நீதா நிகழ்த்து.
'கவிகள்யார் சொல்வார் கவிப்பொருள்யார் விள்வார்
அவிர்பலநூலா ராய்வார்—எவர்விருந்தை
ஆசையுட ணேம்புவார் அன்புமிக யாவர்சிவ
பூசைபுரி வார்நிதமுன் போல்.'

என்று துதிக்கப் பெற்ற நெல்லையப்பன் கவிராயர் (1845—1916) 'திருநெல்வேலித் தல புராணம்' ஒன்றை 120 சருக்கத்தில் ஆக் கின ரன்றிப் பல சிறு நூல்கள் செய்தன ரென்பர். அப்புராணத் தில் அருமையான புராண கதைகளும், ஒழுக்கம் பற்றிய படலங் களும் பல வுள. அவர் குணசீலத்தையும் புலமையையும் யாமும் நேரில் அறிகுவம்.

### 10. சங்கர நமசிவாயர்.

இலக்கணக் கொத்துச் செய்த சுவாமிநாத தேசிக ரென்ற ஈசான தேசிகரின் மாணவர் சங்கர நமச்சிவாயரெனப் படுவர். இவர் நன்னூலுக்கு விருத்தியுரை கண்டவர். ஈசானமடத்தில் வதிந்திருந்தனர்.

## 11. திருப்பாற்கடலநாதக் கவிராயர்

ரீனியஸ் பாதிரியாருக்குப் பதினான்கு ஆண்டு தமிழ் ஆசிரியராயிருந்த திருப்பாற்கடலநாதக் கவிராயர் அந்நகரில் வாழ்ந்த அம்பலவாணக் கவிராயரின் மாணவரெனப் படுவர். ரீனியஸ் மரித்தபொழுது விருத்தப் பாவில் தம்முடைய வருத்தத்தை வரைந்துளர். இவர் பன்னூல்களிற் றேர்ச்சியுற்றவர்.

## 12. வெள்ளியம்பலத் தம்பிரான்

சிந்து பூந்துறையில் தருமபுர மடத்திற் புலமை வாய்ந்த பெரியார். வெள்ளியம்பலத் தம்பிரானிடம் சிவப்பிரகாசர், கருணைப் பிரகாசர், வேலப்ப தேசிகர், என்ற உடன்பிறந்தார் மூவரும் கல்வி கற்றுத் தேர்ந்தனர். அப்பெரியார் மீது பகை பாராட்டி இகழ்ந்து வந்த புலவனொருவனைத் திருச்செந்தில் நகரிற் கண்டு அவனுடன் பாப்போர் புரிந்து தோற்கடித்துத் தம் புகழையும் தம் மாசிரியர் புகழையும் நாட்டினவர் மூவரில் மூத்தோரான சிவப்பிரகாசரெனப்படுவர். 300 கலித்துறையில் 'திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி'யைச் சிவப்பிரகாசர் பாடி வென்றனர்.

## 13. அழகிய சொக்கநாத பிள்ளை

நெல்லைக்கு அணித்தாயுள்ள தச்சநல்லூரில் வன்னியப்ப பிள்ளை குமாரர் அழகிய சொக்கநாத பிள்ளை யென்பார், 45 ஆண்டுகட்கு முன்னர்வரை சிற்றின்பச் சொற்களாற் பேரின்பம் பெருக்கிய புலவர் இவரே யாவர். நெல்லைக் காந்திமதி யம்மை பிள்ளைத்தமிழ், அந்தாதி, மாலையும், இவருக்குப் பேருதவி செய்த இராசவல்லிபுரம் முத்துசாமிப் பிள்ளைபேரில் 'காதல் பிரபந்தம்' ஒன்றும், சங்கரன்கோயில் கோமதியம்மை பேரில் பதிகமும் கணக்கற்ற சிலேடை மிகுந்த விடுகவிகளும் இவராலாக்கப்பெற்றுள.

## 14. அரிகிருஷ்ண பிள்ளை

பாளையங்கோட்டைத் தலை நகரில் கிறிஸ்தவர்களில் வேளாண் குலத்தவரான எச். ஏ. கிருஷ்ணபிள்ளை (1840-1910) என்பார் கம்பனது இராமாயணம்போன்ற சொற்சுவை, பொருட்சுவை

நிறைந்த நூல்கள் மூன்றினை ஆக்கினவராவர். பதினான்காண்டுகளாக எழுதிய நூல் 'இரக்ஷணிய யாத்திரீகம்'. இதில் ஐந்து பகுதிகளும் 47 காண்டங்களும் 3800 செய்யுள்களும் உள. பனியனென்ற ஆங்கில ஆசிரியர் ஆக்கிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற நூலை முதல் நூலாகக் கொண்டு இந்நூ லாக்கப்பட்ட தென்பர். 'இரக்ஷணிய நவநீதம்' 'இரக்ஷணிய மனோகரம்' என்றவை மற்ற இரு நூல்களாம். இவை முறையே கிறிஸ்தவ வரலாறு, கிறிஸ்தவ வொழுக்கம் கிறிஸ்தவ தேவாரம் எனப்படும்.

(தொடரும்)

---

# உழிஞைத் திணை

## [இளவழகனார்]

கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதில் நிலைஞாயில்
அம்புஉடை ஆர்எயில் உள்அழித்து உண்ட
அடாஅ அடுபுகை அட்டுமலர் மார்பன்.

(பதிற்றுப்பத்து, உ௰)

'காவற்காடும் ஆழ்ந்த அகழியுஞ் சூழ்ந்து உயர்ந்த மதின் முகடும் நிலைத்த மதிலுறுப்புகளும் வாய்ந்த, அம்புகளுள்ள அரிய அரணை, உள்ளழித்து வென்ற ஊர்சுடு புகையையுடைய கொன்று மலர்ந்த மார்ப'னென்க.

மதில், ஆகுபெயர்; ஞாயிலும் அது; 'ஞாயில் - ஏப்புழைச்கு நடுவாய் எய்து மறையுஞ் சூட்டு' * என்று நச்சினார்க்கினியரும், 'ஞாயிலும் - குருவித்தலைகளும்; இதனை ஏவறையென்பாருமுளர்;† என்று அடியார்க்கு நல்லாரும் ஞாயிலை மதிலுறுப்புகளாகவே கூறுதல் காண்க. அரிய அரணாவது, 'பொறிகளான் அணுகற்கருமை' யென்பது பரிமேலழகருரை.‡ 'அட' வென்னுஞ் சொல் ஈறு நீண்டு அளபெடுத்த தென்க;

---

* சிந்தா, க : ௭௬ † சிலப், ௧௫ : உகஎ. ‡ திருக்குறள், அரண், ௩.



உழிஞைத்திணை

அடுதற்கு அடு புகை' யென்பது பொருள். இதனை 'ஊர் சுடு புகை' யென்றார் உரையாசிரியர். பகைவரைக் கொன்று அதனால் ஆசிரியர் அவனை 'அட்டு மலர் மார்பு மலரும் அரசனாதலின், வரும் மகிழ்ச்சிப்பெருக்கினால் மார்ப' னென்றார்.

கறுத்தெழுந்து பகைமேற் சென்ற வஞ்சியரசன் பகைப் புலத்துக் காவற்காடு நடுவண் பாசறை யமைத்துக்கொண்டு அன்றிரவெல்லாம் அவண் தங்கியிருந்து விடியற்காலையிற் போர்க்கெழுவான். இதற்கு முன்னமேயே அவ் வஞ்சி மன்னன் தன் பகைவனது ஊர்ப்புறத்தைச் சுட்டும், அங்கெல்லாங் காவல் சூழ்ந்துகொண்டிருந்த பகைவீரரைக் கொன்றும், துறைபடிந்திருந்த களிறு முதலான அந்நாட்டுக் கொல் விலங்குகளை அட்டும் அம்மன்னனுக்குச் சினமூட்டினானாதலின், அவனுந் தன்னைச் சினப்பித்த அம்மாற்றரசனை வெல்வான் கருதி வஞ்சியொழுக்கம் மேற்கொண்டு பகைமேற் செல்வான். தன்னோடு மாறுகொண்டு தன்னைக் கறுவிய மாற்றரசனை அவன்றன் வலி[illegible]யடக்குதல் ஒன்றே குறித்துப் போர்க்கெழுகின்ற வேற்றரசனொருவன் மேற்செலவே வஞ்சித்திணையாமென்று முன் கட்டுரையில் விளக்கப்பட்டமையின், அவ்வொழுக்கமே மேற்கொண்ட இம்மாற்றரசனும் வஞ்சியரசனேயாயினான். எனவே கரந்தையரசன் வஞ்சிவேந்தனைப் போர்மேல் வந்தமை கண்டு, வெட்சிமன்னனும் வஞ்சிவேந்தனாய் அப்பகைமேல் வந்தானென்பது தெளிவாய்ப் புலனாகின்றது. இவ்வாற்றால் முன்பு வெட்சிமன்னனையுங் கரந்தை மன்னனையுமிருந்த இருபெரு மன்னரும் இப்போது வஞ்சிமன்னராயினார். வெட்சியொழுக்கமுங் கரந்தையொழுக்கமும் வெறும் வீரரளவிலேயே நின்று முன்பு நிகழப்பெற்றமைபோ லல்லாமற் பகையரசரைக் கறுவிப் போர்மேற் செலலான இவ் வஞ்சியொழுக்கம் இப்போது மன்னரளவில் வந்து நிகழ்கின்றது. இவ்விருவேறு மன்னரும் ஒருவரையொருவர் கறுத்து வஞ்சியொழுக்கம் மேற்கொண்ட உள்ளவியற்கையையும் உலக வியற்கையையும் ஆசிரியர் தொல்காப்பியனார் தமது அகல அறிவினால் நன்காராய்ந்து பார்த்து முடிவில் அவ்வரசர் இருவரொழுக்கமும் வஞ்சிக்கண் ஒன்றே

யாதல் துணிந்து 'வஞ்சித்திணை' யென்று அவர்க்கு ஒருதிணை யே தமதிலக்கணத்தில் வகுத்தாராக, மற்றதற்கு முற்றும் மாறுகப் பன்னிருபடலமுடையார் முதலியோர், முதலிற் போர் மேற்கொண்டு எதிர்த்து வந்த பகையரசனெழுக்கமே 'வஞ்சி 'யாமென்றும், மற்றது கண்டு பின்னர் எதிர்சென்று ஊன்றும் மாற்றரசனெழுக்கம் 'காஞ்சி' யா மென்றும் உண் மைக்கு வேறுக உரை நிறீஇ ஆசிரியர் நுண்முறைக்கு மாறுயி ஞர். இவரிடைப்பட்ட இக் கருத்து வேறுபாடுகளையும், அவற் றுட் பொருந்துவது தொல்காப்பியஞர்தங் கருத்தே யாதலை யும், அதற்குரிய ஏதுக்களையும் 'காஞ்சித்திணை'க் கட்டுரையிற் றெளிவாய் விளக்குவமாதலின் ஈண்டவற்றை இம்மட்டோடு நிறுத்திக், கரந்தை யரசன் வஞ்சிசூடிப் பகைப்புலம் வந்து பாசறை யமைத்துக் கொண்டு ஊர்ப்புறங்களைச் சுட்டும் அட் டும் பகைமன்னனைப் போர்க் கெழுமாறு சினப்பித்தாஞக, அவனும் அப் பகைமேற்கொண்டு எதிர்வந்து அப்போரிற் கலந்துகொண்டானென்னும் முடிவே இவற்றின் முடிபாக இங்கெடுத்துக் கொண்டு, இனி உழிஞைப் பொருளையே கரு திச் செல்வாம்,

போரிற் கலந்துகொண்டு இவ்விருபெரும் பகையரசருஞ் சினம்பெருகி நிகழ்த்தும் போர்நிகழ்ச்சியை ஆசிரியர் தும்பைத் திணையென்று வகுத்துக்கொண்டு வேறு விளக்குவர். ஆதலின், அஃது அங்குக் காணற்பாலது. அது கிடக்க, இனி இவ் வாறு போர்மலையும் பகைமன்னரிருவரில், இடையே படைக் காற்ருது தளரும் ஒருவன் தனது அரணகத்துச் சென்று ஒடி ஒளித்து, அவன் வாயில் மூடி யடங்கி, அவ்வரணுதவியாக நின்று பின் அம்மாற்றரசனெடு பொருது வெற்றிகோடல் கரு துவான். இவ்வுண்மையை, 'வஞ்சியிற் சென்ற வேந்தனெடு போர்செய்த லாற்ருது உடைந்த மாற்று வேந்தன் அரண்வலி யாகப் போர்செய்யு மாதலானும்'* என்று இளம்பூரண ரொரு வர்மட்டுமே தெளிவாய் எடுத்துக்காட்டினுர். இங்ஙனம் அரண்

---

*தொல், புறத், அ.

செய்து வாயில்டைத்துக் கொண்டு அதுவே உதவியாகப் போர்புரிபவன், முதலில் வஞ்சி சூடி வந்த கரந்தை மன்னுக வேனும், அல்லது அவன் மேற்செலவு கண்டு எதிர்வந்து கலந்த வெட்சிமன்னுகவேனும் இருக்கலாம்.

இனிப் பழந்தமிழரசர்கள் தமக்கு அரணுக அமைத்துக் கொண்ட மதிலமைப்புகள் மிகவும் வியத்தற்குரியவை. இம் மதிலரணைச் சூழ்ந்து நீரரண் நிலவரண் மலையரண் காட்டரண் என்று இயற்கையுஞ் செயற்கையுமான நான்கரணங்கள் முறையே அமைந்திருக்கும். இவற்றை,

> ' மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
> காடும் உடையது அரண் ' †

என்று **திருவள்ளுவப் பெருமானும்** வகுத்துக் கூறினர். உரையாசிரியர் பரிமேலழகர் இவற்றினியல்பினை ' எஞ்ஞான்றும் வற்றாத நீரென்பார் மணிநீரென்றும், நீரு நிழலுமில்லா மருநில ‡ மென்பார் மண்ணென்றும், செறிந்த காடென்பார் அணிநிழற் காடென்றுங் கூறினர்' என்னுந் தமது உரைக் கூற்றினுல் நன்கு விளக்கினர். நீரரணென்பது மதிலைச் சூழ்ந்து ஆழ்ந்தகன்ற அகழியாகும். இவ்வரண்களே பகையரசர் திடு மென்று நாட்டிட் புகுந்து கோட்டையைக் கைப்பற்றுமைக்குப் போதுமான பாதுகாப்புக்களாம். அதனுற்றுன், கரந்தையர சன் வஞ்சி சூடிப் பகைப்புலம் வந்தஞான்று, அந்நாட்டின் கடைசி அரணுன காட்டின்கண் மலையரணுக்கு அப்பாற் பாடி வீடமைத்துக்கொண்டு அவண் தங்கினன். இடையே மலையர ணும் நிலவரணும் அவற்றின் காவலும் இன்றேல், அவ்வரசன் அவண் தங்காது நேராய் மதிலர ணருகாகவே வந்து பாசறை யமைத்திருப்பான். ஈண்டு இவ்வரண்களுக் குரிய அரசன் போர் செய்த லாற்ருது இளைத்துத் தனது மதிலரண் மாட்டுப் புகுந்தடங்கினு னதலின், மாற்றரசனும் அஞ்ஞான்று அவனைப் பின்பற்றியபடியாய் மேற்காட்டிய காட்டரண், மலையரண், நில வரண் முதலான கடத்தற்கரிய அரண்களையெல்லாம் கடந்து

† திருக்குறள், எசு : உ ‡ மருநிலம் - பாலைநிலம்.

மதிலரணைக் கிட்டுதல் அவன்றனக்கு எளிதாயிற்று. இன்றேல், அஃது அரிதேயாகு மென்க.

எனினும் மதிலரணையுங் கடந்து அம் மாற்றரசன் உள் நுழைதல் இவைபோலும் அத்துணை எளிதாவதன்று. மதில ரண் சிறுசிறு துண்டுக் கருங்கற்களாலேனும் அன்றிச் செங்கற் களாலேனுஞ் சுண்ணம்பினுல் இறுக்கி மிக வலுவாய்க் கட்டப் பட்டிருக்கும். அம்மதிற்சுவர் ஏறக்குறைய ஏழெட்டுமுழம் வரையிலும் அதற்கு மேலுங்கூட அகன்றிருக்கும். அவற்றிற் குரிய வாயில்களின் அகலம் பதினைந்து அல்லது இருபது முழங் கட்கு மேலுங் கொள்ளப்படும். உயரமோ அண்ணாந்து காண் டற்கு இயலாததேயாகும். அவ்வாறமைந்த அம்மதிற் சுவர் தொலைவிற் காண்பார்க்கு ஒரு மலைக்காட்சிபோலத் தோன்று மென்க. புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியரான ஐயனு ரிதனார், இம்மதிலின் உயர்வை ஒருவமை வாயிலாய் நன்கு தெளிவித்தற் பொருட்டு, மாற்றரசன் பகைவர் மதிலை முற்று கையிட்டிருக்கும்போது அவன் வீரர் போர்செய்தற்காக அம் மதிலின்மேற் பாய்ந்தேறுதலைப் புட் கூட்டங்கள் ஒருயர்ந்த மலையுச்சியிற்சென்று புதல் புகுதலைப்போற் றோன்றுகின்ற தென்று கூறுவர். இதனை,

'நிரைபொறி வாயில் நெடுமதிற் சூழி.
வரைபுகு புள்ளினம் மான—விரைபுஅடைந்தார்
வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்
தோலேந்தி யாடல் தொடர்ந்து'*

என்னும் வெண்பாமாலையிற் காண்க. இங்ஙனமே பிறிதோரிடத் தும் அவர், மதின்முகடு ஏறிய புறத்து வீரர் பின்னர்க் கீழ்முக மாய் உட்பாய்ந்து ஆரவாரித்தலை, 'மலையுச்சியிலிருக்கும் பறவை யினங்கள் கீழே நிலத்தின்கட் கிடக்கும் இரையைக்கண்டு அதனை எடுத்தற் பொருட்டு ஒரே பாய்ச்சலாய் விரைந்து பாய்தலைப் போற் றோன்றுமென்பர்.† திண்மை அகலம் உயர்வு என்

---

*புறப்-வெ, சூ: கூ.  †புறப்-வெ, சூ: உ௰

பனவும் பிறவும் இவ்வாறு இனிதமைந்து காணும் இம்மதி லமைப்பினை ஆசிரியர் திருவள்ளுவர்

'உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவர ணென்றுரைக்கு நூல்'*

என்று நன்ருய் எடுத்துக் கூறினர்.

இனி இத்திருவள்ளுவர் திருமொழியில் 'அருமை'யென்று நான்காவதாய்க் கூறப்படுவதோ ருண்மையையும் அறிதல்வேண்டும். 'அருமை'யென்றது, பகைவர் கிட்டுதற்கு அரிதாம்படி அம்மதிலரண் அமைந்திருப்பதாகும். எனவே திண்மை, அகலம், உயர்வு என்னும் அவையேயல்லாமல், மாற்ருர் கிட்டுதற்கியலாதவாருய் வேறு சில அமைப்புகளையும் அம்மதிலரண் உடையதாய் விளங்குமென்பது இதனுற் பெறப்படும். அவைதாம், அம்மதிலரண் வஞ்சனை பலவும் வாய்ந்து பொறிகள் பலவும் அமைந்திருப்பதாமென்று கொள்க. இம்மதி லரணே யல்லாமல் ஏனைப் பிற அரண்களும் வஞ்சனை பல உடையவாயிருக்குமென்ப. காட்டரண்மாட்டு, முட்கதவுகளை ஆங்காங்கு முடைய முள்வேலிகள் பலவும், நெருங்கிய புதல்களில்லாவிடத்து வஞ்சனை மிக்க படுபள்ளங்கள் பலவும், நெறிகளிடையே கீழ் பரப்பிய முட்படல்கள் பலவும், காவல்களும் அமைந்திருக்கும். மலையரணகத்து நேர் நெறிகள் காணப்படா. அல்லாமலும் அதன்கண் மறைந்த காவல்கள் பல அங்கங்குமிருக்கும். நிலவரண் நீருநிழலுமில்லாத வெறும் மருநிலமாகவே கிடக்கும். நீரரணும் கொடிய முதலைகள் முதலியவற்றை உடையதாகிக் கடத்தற்கரிதாகவே காணப்படும். இவ்வெல்லா அரண்களிலும் பிறரறியாதவாறு மேலே இருந்துகொண்டு பகைவரை அம்பு முதலியவற்ருற் ருக்குதற்கேற்ற உயரமான மறைவிடங்களும் பொறிகளும் ஆங்காங்கு முண்டெனக. காட்டரண் முதலிய ஏனை நான்கரண்களும் இங்ஙனம் வஞ்சனைகள் வாய்ந்து பகைவர்கள் கடத்தற்கரிதான பாதுகாப்புடன் திகழுமென்பது, "தோட்டிமுண் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து

*திருக்குறள், எ௪௩: ௨

அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து' என்றும், 'இனி மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்தலில்லா ஆரதர் அமைந்தனவும், இடத்தியற்றிய மதில்போல வடிச்சிலம்பின் அரணமைந்தனவும் மீதிருந்து கணை சொரியும் இடமும் பிறவெந்திரங்களும் அமைந்தனவும், அன்றிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன அமைந்தனவாம்' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது புறத்திணையியலுரையிற் கூறும் உரைப்பகுதிகளாற் *றெளியப்படும்.

இனி மதிலரண்மாட்டுக் காணப்படும் வஞ்சனைகளாவன: மதிற்சுவர்க்கண் உள்ளறைகள் பல அமைக்கப்பட்டிருக்கும். அவ்வறைகளிலெல்லாம் பகைவரை யழிக்கும் பொறிகள் பலவும் நிறுத்தப்பட்டிருக்கும். அப்பொறிகளிலிருந்து பல கருவிகள் வெளிப்பட்டுப் பகைவரைக் கெடுப்பதற்காக, அம் மதில்களூடு பற்பல வடிவங்களுடன் நெடுக சந்துகளும் வாய்ந்திருக்கும். பொறிகளை யியக்கும் மறவர்கள் அவ்வரணகத்தே யிருந்து உள்ளியங்குவர். எனவே, பொறிகளு மியங்கும். விற்பொறிகள், குரங்கு, குருவி, களிறு, பன்றி, பாம்பு, ஆடு, குதிரை, பேய், பருந்து, அரிகயிறு, தூண்டில் மூங்கில் முதலியவற்றின் வடிவாகச் செய்துவைக்கப்பட்ட மிகக்கொடிய பொறிகள், நெய்யுமிழ் கருவி, தீ யுமிழ் கருவி, செம்புருக்கு மிடா, கவண், கற்பொறி, தொடக்கு, கவை, கழு, புதை, புழை, ஊசி, எழுவுஞ் சீப்பு, கோல், குந்தம், வேல், நூற்றுவரைக் கொல்லி, தள்ளி வெட்டி, சகடம், மரநிலை யென்பனவாகப் பல பொறிகளும் படைக் கருவிகளும் அவ்வரணகத் தறைகள் உடையவாயிருக்கும்.

இவற்றுள் விற்பொறிகளென்பவை, தாமே வளைந்து தாமே அம்புகளையும் எடுத்தெறியும்; குரங்குப் பொறி, மதிலையணுகும் பகைவரை அவரணுகுதற்குமுன் தானே எட்டிப் பாய்ந்து அவர்களுடம்பைப் பல்லாற் கடித்து வெவ்வேறாய்ப் பிய்த்தெறியும். குருவிப் பொறி, மாற்றார்மேற் சென்று அவர் கண்களைக் குத்தும். இதனையே உரையாசிரியன்மார் 'சிச்சிலிப்

---

*தொல், புறத், ௰.

பொறி' யென்ப. களிற்றுப் பொறி யென்பது தமது திக்கை களாற் பகைவர் தலைகளை முறுக்கிப் பிடுங்கியெறிவது. பன்றிப் பொறி, மதின்மேலேறும் பகைவருடம்புகளைத் தனது கூர்ங் கொம்பினாற் கிழித்தழிக்கும். இது மதிலின் மேற்புறத்தி லமைக்கப்பட்டிருக்கும். பாம்புப் பொறி யென்பது, பகை வரை அப்படியே வாய்திறந்து விழுங்கிவிடும். ஆட்டுப்பொறி கள் தம்முடைய திருகிய கொம்புகளாற் பகைவருடலை முட்டிக் குத்தி அவர்தங் குடரைச் சிக்கி யிழுத்து வெளிக்கொணரும். குதிரைப் பொறி, மாற்றாருடைய மார்பைச் சிதற உதைத்து அகழியிற் றள்ளி முதலைக்கு இரையாக்கும். பேய்ப்பொறி, புறத்து வீரரை ஒரே அறையாய் ஓங்கி யறையும். பருந்துப் பொறியோவெனின், அவர்தம் உச்சியைக் கொத்தி மூளை யைக் கடிக்கும். அரிகயிறு என்பது, மறவரிடையே காற்றி லலைவதுபோலக் காணப்பட்டுத் தன்னைப் பற்றுவாரது கையை நாணற்புல் முதலியவற்றைப்போல அரியுங் கயிறாகும்; தூண் டில், அகழியோரமாய்க் கரையிற் சார்த்தப்பட்டதுபோற் கிடந்து அவ்வகழியைக் கடந்து மதிலைப் பற்றும் மாற்றாரைக் கோத்து வலிக்கும்; மூங்கிற்பொறி, மூங்கிற் றடியளவாய் நின்று பகைவீரரை எலும்பொடிய நையப் புடைக்கும்; நெய்யுமிழ் கருவியென்பது, கொதிக்கக் கொதிக்கக் காய்ச்சிய எண்ணெய் முதலியவற்றைப் பகைவர் கூட்டத்திற்கு மேலே பசைந்து அவர்மீது மழையெனச் சொரிந்துகொண்டிருக்கும். தீயுமிழ் கருவியென்பதும், அதைப்போலவே தீயை யுமிழாநிற்கும்; செம்புருக்குமிடாவென்பதும் அவற்றைப்போலவே ஈயம் செம்பு முதலியவற்றை நீராயுருக்கி அவற்றுக் குழம்பைப் பகை வர்மீது சொரியும்; இவற்றை உருக்குதற் கேற்ற 'உலை'யும் பாகெனக் காயுங் 'குழிசி'களும் அம்மதிலறைகளில் அகலமாய் அமைக்கப்பட்டிருக்கும்; கவண் என்பது, கவண் கயிறுபோற் காணப்பட்டுக் குறித்த ஓரிடத்திலேயே கற்களை ஒவ்வொன்றாக விறுவிறுவென்று எறிந்துகொண்டிருக்கும். ஆனாற் கற்பொறி யென்பது அங்ஙனமன்று; அஃது ஓரிடத்திலேயே யிருந்து கொண்டு பகைவரது கூட்டம் முழுமையுஞ் சிறு சிறு கற்களைக்

கன்மழைபோல எங்குஞ் சொரியும். இதனை, 'இடங்கணிப் பொறி' யென்றுங் கூறுப. தொடக்கென்பது, மாற்றார் கழுத்திற் கழுக்கோல்போலப் பூட்டி முறுக்குஞ் சங்கிலியாகும். இது முறுக்கேறிய கயிற்றையும் உணர்த்தா நிற்கும். கவை, குறடுபோல் இருபிளவாய் அகழியிற் கிடந்து அதனைக் கடந்து செல்வாரை இடுக்கி மறியத் தள்ளுவதாகும். கழுவென்பது பகைவர் கழுத்தை நெருக்குங் கழுக்கோலென்க. புதை, அம்புகளை மழையென வெறியும்; இவையிருக்கும் மதிலறைகள் 'புழை'யெனப்படும். 'ஏவறை'களென்று நூலுரைகளிற் கூறப்படுவதும் இது. ஊசியாவது, பகைவர்கள் மதின்மேல் ஏறுங்கால் அவர்கள் கைகளைப்பொதுக்கும்படி அம்மதிலின்மேற் சொருவி இறுக்கப்பட்டிருக்கும். மதிலின் வாயிற் கதவுக்கு வலிமையாக உள்வாயிற் படியில் நிலத்திலே வீழவிடும் மரக்கட்டைகள் 'எழுவுஞ் சீப்பு' எனப்படும். கோல், நீண்ட ஈட்டி; குந்தம், குத்திக் குடரை யிழுக்கும் வகையாக நுனி வளைந்து குட்டையா யிருப்பதொரு சிற்றீட்டியாகும். வேல் என்பது, நுனி இலை வடிவா யமைந்ததொரு படைக்கருவி; 'நூற்றுவரைக் கொல்லி, யென்பது, மதிற்சுவரிலிருந்து வெளிப்பட்டுப் படையிடையே வெடித்ததாயின், அது நூறுபேரைக் கொன்றழிக்கும் ஆற்றலுடையதாயிருக்கும். 'ஆட்களைக் குப்புறத் தள்ளித் துணிபடுத்தும் பொறியைத் 'தள்ளி வெட்டி' யென்ப. இழுப்பு வண்டியைப்போ லிருந்து ஆட்களை உட்படுத்திக் கொணரும் ஒருவகைப் பொறிக்குச் 'சகட'மென்று பெயர். தலைகளைத் திருகிக்கொள்ளும் வலியுடனே உடம்பை நெருக்கி எலும்புகளை முறித்துக் கூழ்படுத்தும் நெருக்குமரம், 'மரநிலை'ப் பொறியாம். இம் மரநிலைப் பொறியே 'ஐயவித்துலா'மென்றுங் கூறப்படுகின்றது.* 'ஐயவித்துலா' மென்பதைப் பழைய உரையாசிரியன்மாரே பலவாறுங் கூறுப.

பண்டைத் தமிழரசரின் மதிலரணங்கள் இத்துணை வஞ்சமும் பொறிகளும் அமைந்து, மிக்க பாதுகாப்புடன், ஆசிரியர் திருவள்ளுவனார் கருதியபடி பகைவர்கள் அணுகுதல் ஏலாத

---

* சிந்தா, க; ௱௧௩-௪

அருமை வாய்ந்து, பதாகையொடுந் திகழும் என்னும் இவ்வுண்மைகளை, ஆசிரியர் இளங்கோவடிகள்,

"மிளையுங் கிடங்கும் வளைவிற் பொறியுங்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையு
மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையு
மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில்"

என்று தமது சிலப்பதிகாரத்தில் இனிதெடுத்துக் கூறினர். பாதுகாப்புக்கு முதலிடமாய் விளங்கும் இத்தகைய மதிலரண்களையே தொல்காப்பியனார் **முழுமுதலரணம்** என்பர். இனி இம்மதிலரணங்கள் புறஞ்சேரி மதில், நகர்ப்புறத்து மதில், மனைப்புறத்துமதில், உண்மதில்களெனப் பல பல மதில்களாக அரசர் பட்டினத்திற் காணப்படுமென்க. இவற்றின் நடுவிலேயே அரசருடைய காவற் கோட்டைகள் திண்மை வாய்ந்து திகழும். இக்காவற்கோட்டைகட்கு எவரும் அறியாதபடி போக்கு வரவு செய்ய நிலத்தூடு அகழ்ந்தெடுக்கப்பட்ட கள்ளவழிகள் (சுரங்கம்) சிலவும் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றையும் இவை போன்ற மதிலமைப்புகள் பிறவற்றையு மெல்லாம் பழைய தமிழ் நூல்களில் ஆங்காங்கும் விளக்கமாய்க் கண்டுகொள்க. இத்தகைய வஞ்சனைகளும் பொறிகளுமமைந்த மதிலரணத்தை முற்றிவரும் மாற்றரசரும் இவற்றை யெல்லாந் தப்பி அவ்வரணத்தைக் கைப்பற்றுதற்கான கிடுகுபடை, வலிய இருப்பு மூடிகள், மாற்றுக்கோலங்கள் முதலான வஞ்சனைகள் வாய்ந்தே அரண்முற்றுவரென்பது இங்கு நினைவுகூரற்பாலது. இவை

* சிலப், கடி; ௨௦௭-௨௧௭

யெல்லாம் எம் பழந்தமிழரசரின் நாகரிக மேன்மைக்குச் சிறந்த அடையாளங்களாகும்.

இனிப் போர் செய்தலாற்றாது உடைந்து அரண் கண்டு புகுந்த அரசனை, மாற்று வேந்தன் பின்றொடர்ந்து அவ்வரணத்தைத் தனதாக்கிக் கொண்டு, பின்னர் அவனைப் புகலும் போக்கும் இல்லாதபடி செய்து கறுவு தீர்ப்பான் கருதி அவ்வரண் முற்றுவான். முற்றுதலென்பது, அவ்வரணிடத்தை நாற்புறமுஞ் சூழ்ந்து அகத்தாரொடு பொருது உள் நுழைந்து அதனைக் கைப்பற்றப் பார்த்தலென்க. இவ்வுணர்ச்சியுஞ் செய்கையும் ஒருங்கு வாய்ந்த ஒழுக்கமே **உழிஞைத்திணை** யென்று ஆசிரியராற் குறிக்கப்படும். **ஆசிரியர் தோல்காப்பியனார்,**

> "உழிஞை தானே மருதத்துப் புறனே
> முழுமுத லரணம் முற்றலும் கோடலும்
> அனைநெறி மரபிற் றாகு மென்ப"

என்று இதனை நன்கு விளங்கவைப்பர். இதன்கண், 'முற்றலும்' 'கோடலும்' என்று வந்த இரண்டு சொற்களும், நூற்பாக் கருத்தினை அது சென்றொழுகு முறையே காணவல்லார்க்கு, அரண் முற்றும் வேந்தன் ஒருவனுடைய தொழில்களையே தெளிவாய் உணர்த்துகின்றன வென்பது எளிதாய்ப் புலப்படும். அங்ஙனமாகவும், **ஆசிரியர் நச்சினார்க்கினியர்** 'முற்ற' வென்பதைச் 'சென்ற வேந்தன் வளைத்த' லென்றும், 'கோட' லென்பதை 'இருந்த வேந்தன் கைக்கொண்டு காத்த' லென்றும் இருவேறரசர் தொழில்களாக உரை கூறினார். ஆனால் **இளம்பூரணரோ** அங்ஙனங் கூறுவாரல்லர். முற்றும் வேந்தனது தொழிலே கோடலுமாமென்பர். இவைதம்முள் நச்சினார்க்கினியருரை, ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தினை நூற்பாவின் வேறாக மாறுபடுத்துதலே யல்லாமல், உழிஞைத்திணை யிலக்கணத்தையும் வேறுபடுத்தா நிற்கின்றது. முற்றலுங் கோடலு மென்னும் இரண்டுமே வளைத்த அரசனுக்குரிய தொழில்களென்று

---

* தொல், புறத், அ;

உரையாமல், ஒன்றை வளைத்த அரசனுக்கும் மற்றொன்றை இருந்த அரசனுக்கும் உரியவாக உரை நிறுத்துதலின் உணர்ச்சியில் இருவேறு வகைப்பட்ட அவ்வரசர் இருவரொழுக் கங்களையுமே அவர் உழிஞையெனக் கருதினாரென்பது நன்கு போதரும். நச்சினார்க்கினியர் கருத்து இஃதேயாதல், 'எதிர் சென்ற வேந்தன் பொருது தோற்றுச் சென்று அடைத்திருத்த லும் உழிஞையாம்' என்று மிகவும் விளக்கமாய் இவ்வுரையைத் தொடர்ந்து வரும் அவரது விளக்க உரையினாலேயே சற்றும் ஐயுறவின்றி நேராய்த் துணியப்படும். ஆனால், உழிஞையிலக் கணம் வகுத்து நூற்பா உரைத்து வரம்பு காட்டிய தொல்காப் பியனார்தம் கருத்து அஃதன்றாய் நிற்கின்றது. மதிலை வளைத்துக் கைப்பற்ற முயலும் மாற்றரசனொழுக்கம் ஒன்றைமட்டுமே அவர் உழிஞை யென்றனர். அஞ்ஞான்று அம்மதிலகத்தே யிருந்து அதனைக்காக்கும் உரிமையரசனொழுக்கத்தை அவர் 'நொச்சி' யென்றே கருதினர். இது 'குடையும் வாளு' மென்று இவ்வுழிஞைத்திணைக்குத் துறைகள் வகுத்துக் கூறும் தமது புறத்திணையிய னூற்பாவிலேயே ஆசிரியர் 'அகத்தோன் வீழ்ந்த நொச்சியு' மென்று தெளித்துக் கூறுமாற்றால் இனிது பெறப் படுமென்க. அந்நூற்பாத் தொடர்க்கண்ணும் நச்சினார்க்கினியர் ஏலா உரையே உரையாநின்றார். இங்ஙனமே இவர் வெட்சித் திணைப் பகுதியினும், ஆசிரியர் ஆநிரை கோடலையே வெட்சித் திணையென்று முதல் நான்கு நூற்பாக்களால் எடுத்து விளக்கி, அவற்றுக்கு வேறாக ஆநிரை மீட்டலைக் கரந்தை யென்று கூறி அதற்கோரேழு துறைகளையும் வகுத்து ஐந்தாம் நூற்பாவில் நிறுத்தினாராக, அவ்வெட்சித்திணை நூற்பாக்களே கரந்தைத் திணையையும் ஒருங்குணர்த்துமென்று தவறாய்த் துணிந்து ஆசிரி யர் கருத்தைத் திரித்து உரை காட்டினார். நச்சினார்க்கினியர்க் குப் பிற்காலத்திலே பழந்தமிழ்நூல்களுக்கு எவரேனுந் தக்கார் உரை கண்டிருப்பராயின், பழைய உரையாசிரியன்மார் உரை கள் பலவற்றுள்ளும் நச்சினார்க்கினியருரைகளே பெரும்பான் மையும் மறுக்கப்பட்டிருக்குமென்பது ஒருதலை. இஞ்ஞான்றும் அவருரைகள் முழுமையுஞ் செவ்வையாய் ஆராய்ந்து ஓராய உரை

யாராய்ச்சிநூ லெழுதுதல் அது செய்யவல்லார் பெருங்கடமை யாகும். எனவே, மாற்று வேந்தன் மதிலரண்களை முற்றுதலுங் கைப்பற்றுதலும் 'உழிஞை'யாமென்றும், அரணகத்தரசன் அதனைக் காத்து நிற்றல் 'நொச்சி'யாமென்றும் பகுத்துணர்ந்து கொள்க. தொல்காப்பியனார் முதலிற் கரந்தைப்பகுதியை வெட்சித்திணைக்கண் அடக்கினாற்போல, நொச்சி யொழுக்கத்தை ஈண்டு ஒரு தனித்திணையாயெடாமல் 'உழிஞை'க்கண் அடக்கினாரென்றறிதல் வேண்டும்.

இனி ஆசிரியர் இவ்வுழிஞைத் திணைக்குத் துறைகள் கூறும்போது உழிஞையரசனான புறத்தோன் அஞ்ஞான்று உணரும் உணர்ச்சி வகைகளைக் 'கொள்ளார் தேம்'* என்னும் நூற்பாவினும், பின்னர் அவன் அரண் முற்றிப் பொரும் போழ்து அவண் செய்யுஞ் செயல் வகைகளைக் 'குடையும் வாளு'† மென்னும் மற்றொரு நூற்பாவினுமாய்ப் பிரித்துக் கூறுகின்றார். ஏனெனில், இந்தத் திணைக்கண் ஏனைத் திணைகளைக் காட்டினும் அறிவின் முனைப்பு இன்றியமையாதாய் வேண்டற்பாலதாதலி னென்பது. புறத்திணையான இவ்வுழிஞையையும் இதற்கு அகத்திணையான மருதத்தையும் நன்கு பயில்வார்க்கு முடிந்த பயனாய் விளைவது அறிவே யாமென்று முன் கட்டுரைகளில் அட்டவணை வகுத்துக் காட்டியிருக்கின்றேம். புறத்திணை உழிஞையாலும் அகத்திணை மருதத்தாலும் ஒருவன் பயின்று பெறும் பயன் அறிவேயா மென்னுமிது அடுத்த 'நொச்சித்திணை'க் கட்டுரையில் விரிவாய் விளக்கிக் காட்டப்படும். ஆதலால் அறிவுணர்ச்சியின் முனைப்பினை இவ்வுழிஞைத் திணைக்கண் வேறு பிரித்துக் காட்டல் வேண்டியே, அவ்வுணர்ச்சி வகைகட்கு ஏனையொரு நூற்பாவும் ஆசிரியர் இயற்றுவாராயினர். இவற்றை முறையே தொகையும் விரியுமென்று கொள்ளல்வேண்டும். நச்சினார்க்கினியர் இந் நுண்முறையினை உற்றுநோக்காமல் தமக்குத் தோன்றியவாறே அவற்றிற்கு வேறு கூறினார். அவர் கூறிய உரை முறைகளை யெடுத்து ஒவ்வொன்றும் மறுத்துக் கூறப் புகின், இது மிகவும் விரியுமென்றஞ்சி விடுக்கின்றேம். மேல்

---

* தொல், புறத், கஉ
† ,, ,, கங

'வாகைத் திணை'க் கண்ணும் ஆசிரியர் இங்ஙனம் தொகையும் விரியுமாகத் துறைகளை வகுத்து அவற்றிற்குத் தனித்தனி நூற்பாக்கள் இயற்றினார். அங்ஙனம் அவரதற்குத் தொகைவிரி நூற்பாக்கள் வகுத்தியற்றுதற்குரிய இன்றியமையாமையும், பாகுபாடும் அவ் வாகைத்திணைக் கட்டுரையில் விளக்குவேம். ஆயினும் அவை இவ் வுழிஞைப் பகுப்பைப்போல உணர்ச்சியுஞ் செயலுமென்னும் முறையிற் பாகுபடுவன அல்லவென்பது ஈண்டறியற்பாலது.

இனிக்

'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்,
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்,
தொல்லெயிற் றிவர்தலும், தோலது பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும், அன்றியும் முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும், திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையும், உடன்றோர்
வருபடை பேணார் ஆர்எயில், உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே'

என்னும் நூற்பாவிற் கூறப்படும் உழிஞையரசன் உணர்ச்சிகளாவன, முறையே பகையரசனது நாட்டை எப்படியுங் கைப்பற்ற வேண்டுமெனல், நினைத்ததை முடிக்கவேண்டுமெனல், இவ் அழியாத மதிலை இற்றைப் பகலே அழித்துமென விரும்புதல், அதற்குரிய 'கிடுகு' 'கேடக' முதலிய பாதுகாப்புக் கருவிகளை மிகுதியாய்க் கண்டுகொள்ளல், அகத்தோனது செல்வ நிலையை யுன்னிப் பார்த்தல், இடையிடையே தமக்கு எய்தும் வருத்தங்களையு முணர்தல், தளர்வு நேர்ந்தால் தானொருவனே யாகித் தனித்துப் போர் செயத் துணிதல், எதிரிகளைச் சிறிதும் பொருள் செய்யாது மதின் முற்றுதலென்பனவாம். இவ்வகையான உணர்ச்சிகளாற் றிண்ணிய நெஞ்சுறுதி பெற்ற உழிஞை மன்னன் இனிச் செயல் புரிவான்.

இச் செயல்கட்காகத் தொல்காப்பியனார் வகுத்துக்கொண்ட துறைகள் பன்னிரண்டாகும். அவை முறையே, நல்ல நாழிகையில் மாற்றார் மதிலகத்தே முதன் முதற் காவற் குடையை முன்னிடுதலும், அவ்வாறே வாட்படையை முன்னிடுதலும், ஏணியை

மதின்மேற் சார்த்திக்கொண்டு அதன்மேலேறி நின்று போர்புரிதலும், மிகக் கொடிய போர்புரிந்து புறமதிலைக் கைப்பற்றிக்கொண்டு அவ் ஊக்கத்தோடு உண்மதிலைக் கிட்டி வளைத்தலும், அங்ஙனம் உள்ளணுகிப் பொருதலால் அகத்தோன் தளர்தலும், அதைக் கண்ட புறத்தோன் பின்னும் முறுகி அவ்வகத்தரசன் மேல் வீழ்தலும், அகழியிற் பொருதலும், மதிலகத்தன்றி ஊரகத்தே பொருதலும், இருதிறத்தாரும் மதின்மேல் நின்று பொருதலும், அம்மதிலுச்சியில் யாரேனு மொருவன் பட்டானாக அவன் மணிமுடிகொண்டு முடிசூடி மகிழ்தலும், அஞ்ஞான்று மாற்றுரைக் கொல்லுங் கருவியாயிருந்த வாளினைக் கொற்றவையா யெண்ணி நீராட்டி மகிழ்தலும், தான் மதிலரணைக் கைப்பற்றிக் கொண்டமையால் இதுகாறும் இருபிரிவினராய் மாறுபட்டு ஏனைப் பல மதில்களினும் பொருதுகொண்டிருந்த மாற்றரசரும் வீரருமெல்லாம் தாமே மாறுபாடு அவிய அவரெல்லாரையும் ஒருங்கு தொகுத்தலுமாகும்.

இவற்றுட், கரந்தையரசன் வஞ்சி சூடிப் பகைமே லெழுந்த ஞான்றும் அவன்தன் குடையையும் வாளையும் நாட்கொண்டு முன்னே விடுத்தானாயினும், ஈண்டுப் பகையரசன் மதிலகத்தை முற்றும்போது தனக்கே உரித்தாய் வரவிருக்கும் அப் பகைநாட்டின்கண் முதன் முதல் அவற்றை நாட்கொண்டுவிடல் அதனினும் முதன்மையாமாதலின், ஆசிரியர் தொல்காப்பியனார் அவைதம்மை அவ் வஞ்சிப் பகுதியிற் கூறாமல் இவ்வுழிஞைப் பகுதியிற் கூறினாரென்க. இந்நுண்முறையினை **நச்சினார்க்கினியர்** 'குடைநாட்கோளும் வாணாட்கோளும் இன்றியமையாதன அன்மையின், ஈண்டுக் கூறாராயினார், அவை உழிஞைக்குக் கூறுப அதற்கின்றியமையாமையின்' என்று வஞ்சித் திணைப் பகுதியி* லெடுத்துக் காட்டினார், **புறப்பொருள் வெண்பாமாலை** யாசிரியரோ இதனைக் கருதினாரல்லர். குடையும் வாளுந் தன்னாட்டைக் காத்தலும் பகைமன்னரை அழித்தலுந் தொழிலாயுடைமையின், அம் முதன்மைபற்றி அரசன் நாட்கொள்ளுதற்கு அவ்விரண்டும் ஏனையவற்றைப் பார்க்கினும் இன்றியமையாத கருவிகளாயின வென்க.

இவ் வுழிஞைத் திணைக்குப் புறப்பொருள் வெண்பாமாலை இருபத்தெட்டுத் துறைகள் வகுத்துக்கூறும். எனினும் அவை யெல்லாம் பெரும்பான்மையும் முதன்மையல்லாதனவாதலின் அவை தாம் மேற்காட்டி வந்த இத்தொல்காப்பியத் துறைகளிலேயே அடங்கியமையும். அவை அவ்வா றடங்கியமையுமாற்றை அவ்வவற்றின் விளக்கங்களையெல்லாம் இவை தம்மோடு ஒருங்கு பொருத்திக் கண்டுகொள்க.

இனி முதலிலேயே போர்செய்தலாற்றாது உடைந்து பின் வாங்கிய வேந்தன் அரணுதவியை நாடி அதனுட் புகுந்து பொருவானேயாயினும் அவன் மதின் முற்றிய அரசனை ஓட்டிப் புறத்தே வந்து போர்வெல்லலென்பது பெரும்பான்மையும் இனி இயலாத தொன்றுமாதலாலும், இஃது, 'எதிர்செல்லா தடைத்திருந்தோன் புறப்பட்டுப் படுதல் சிறுபான்மை'† யென்று நச்சினார்க்கினியர் கூறும் உரைத் தொடரிலும் ஓராறு விளங்குமாதலாலும், அஃதேயன்றி வெற்றித் துறைகட்கெல்லாம் ஆசிரியர் இளம்பூரணர் உழிஞைத் திணைப் பாட்டுக்களையுந் தோல்வித் துறைகட்கெல்லாம் நொச்சித்திணைப் பாட்டுக்களையுந் தமது புறத்திணையியலி னுரையிடையே மேற்கோட் காட்டுதலாலும், தொல்காப்பியனார் நூற்பா முறைகளும் இவ்வகைத் துணிவுக்கே இடனாய் அமைந்திருத்தலாலும் ஈண்டு உழிஞை யரசர்க்கே பெரும்பான்மையும் வெற்றியுண்டாமென்பது நன்கு தெளியப்படும்.

---

# பெரியபுராணம்

[மா. வே. நெல்லையப் பிள்ளையவர்கள் B. A.]

இக்காலத்தில் பெரியபுராணம் அதன் அருமை பெருமை தெரியாத புதிய ஆராய்ச்சியாளர்களால் பழிக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் பழிப்பது எவ்வளவு உண்மைக்குப் பொருத்தமாயுள்ளது என்பதைப்பற்றிச் சிறிது கருதுவாம். இந்த ஆராய்ச்சி உரை சைவ சமய உண்மைகளை நன்கு அறியாத மக்களுக்காக எழுதப்பட்டது.

பெரிய புராணமானது சைவத்தனி அடியார்கள் அறு பான் மூவரையும் தொகை அடியார்கள் ஒன்பதின்மர்களையும் பற்றிக் கூறும் வரலாற்று நூல். இந்நூல் தன்னை உண்மை அன்புடன் ஓதுகிறவர்களுக்குக் கடவுளைப்பற்றிய உண்மை அறிவும் கடவுள் அன்பும் உண்டாக்கும். அஃது அநபாய சோழ அரசனிடம் முதலாவது மந்திரி வேலையில் அமர்ந்திருந்த சேக்கிழார் பெருமானால் அவ்வரசன் வேண்டுகோளின்படி இயற்றப்பட்டது. சேக்கிழார் பெருமான் இருந்த காலம் கி. பி. ௧௧-வது நூற்றாண்டு. பெரிய புராணத்துக்குச் சுந்தரமூர்த்தி அடிகள் செய்த திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் முதனூல்கள். "உபமன்னியு பக்த விலாசம்" என்னும் வடமொழி நூல் இதற்கு முதனூல் அன்று.

புறச்சான்றுகள் பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்தி மூன்று தொண்டர்களும் நாம் பார்க்கின்ற நமது தமிழ் நாட்டில் பல இடங்களில் பல காலங்களில் வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் இருந்த காலங்கள் கிறிஸ்து பிறந்ததற்குப் பின்னிட்ட காலங்கள்தான். ஒவ்வொரு தொண்டரும் பிறந்தும் வாழ்ந்தும் சென்றுமுள்ள இடங்களில் அவர்கள் அங்கங்கே இருந்தார்கள் சென்றார்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குப் பல புறச்சான்றுகள் இப்பொழுதுங் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டுகளாகச் சில கூறுவாம். சிறுத்தொண்ட நாயனார், மன்னனது சேனைத்தலைவனாக வடபுல அரசனொருவனை வாதாபி என்ற இடத்தில் வென்றதாகக் கூறும் பெரிய புராணச் செய்தியை தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. திருநாவுக்கரசு அடிகளைத் துன்புறுத்திய பல்லவ அரசன் சமணர் பாழிகளை இடித்துக்கட்டிய குணவதீச்சுவரம் என்னும் திருக்கோயில் இப்பொழுதும் உள்ளது. திருநாவுக்கரசு அடிகள் திருப்பூந்துருத்தியில் ஒரு மடம் கட்டி அதில் சிலகாலம் இருந்து வந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. இந்தத் திருமடம் இடிந்து கிடக்கிற நிலையில் இன்றும் திருப்பூந்துருத்தியிலிருக்கிறது. திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் மேடு என்று ஒரு மேட்டு நிலத்தை அவர் குடியிருந்த இடமாக அங்குள்ள மக்

கள் சொல்லுகிறார்கள். இளையான்குடிமார நாயனார் அவர் இருந்த இளையான்குடி ஊரில் இளையான்குடி வயல் என்று அழைக்கப்படு கிற வயல் இப்பொழுதும் உள்ளது. திருவிடைவாயில் திரு ஞான சம்பந்தமூர்த்திகள் செய்த அத்தலத்துப் பதினொரு பாட்டுக் களும் இப்பொழுது இடிந்து கிடக்கிற கோயில் வரிக் கற்களில் எழுதப்பட்டுள்ளன. இந்தத் தேவாரப் பதிகம் சிதம்பரத்தில் நட ராஜப் பெருமானுடைய கோயிலிலிருந்து எடுக்கப்பட்ட ஏடுகளிற் காணப்படாத பதிகம் ஆதலின் சோழ அரசன் செய்த செப்பேடு களிலிருந்து பதிப்பித்த அச்சுப் புத்தகங்களிற் காணப்படவில்லை. ஆகவே வரிக்கற்களில் எழுதப்பட்ட அத்தலத்துப் பதிகம் கோயில் கட்டப்பட்ட காலத்துள்ள ஏடுகளிலிருந்து எழுதப்பட்டது என்று தெளிவாகிறது. இவைபோல்வன புறச்சான்றுகள் கணக்கில்லாம லுள்ளன.

அகச்சான்றுகள் தேவாரங்களிலும் பிறநூல்களிலும் எத் தனையோ அகச்சான்றுகள் உள்ளன. அவைகள் எண்ணுக்கடங் காதவைகளாயுள்ளன.

இந்த அகச்சான்றுகள் புறச்சான்றுகள் எல்லாம் உண்டு பண்ணப்பட்டன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்வார்களே யானால் அந்தச் சான்றுகள் ஒருவரால் உண்டுபண்ணப்பட்டனவா? பலரால் உண்டுப்பண்ணப்பட்டனவா? பல காலங்களுக்குச் சேர்ந்த மையால் ஒருவரால் உண்டுபண்ணமுடியாது. பலராலுண்டுபண்ணப் பட்டனவென்றால் அவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து அவைகளை உண்டுபண்ணினார்களா? தனித்தனியே உண்டுபண்ணினார்களா? ஒன்று சேர்ந்து உண்டுபண்ணினார்கள் என்றால் பற்பல காலங்களி லும் பற்பல இடங்களிலும் இருந்த அவர்கள் எப்படி ஒன்று சேர்ந்து உண்டுபண்ணக்கூடும்? தனித்தனியே உண்டுபண்ணினார்க ளென்றால் பலர் செய்த சான்றுகள் எப்படி ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருக்கும்? ஒரே காலத்தில் ஒரே இடத்தில் பொய் யாகச் (Forgery) செய்யப்பட்ட சான்றுகள் நீதிமன்றுகளில் (Courts) வழக்கறிஞர்களுடைய கேள்விகளால் அடிபட்டுப் போகின்றனவே. அப்படியிருக்கப் பெரியபுராண அகச்சான்றுகள்

எல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமாயும் புறச்சான்றுகள் எல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமாயும் அகச்சானறுகளெல்லாம் புறச்சான்றுக ளெல்லாவற்றினுடன் பொருத்தமாயும் கற்றுக் கேட்டு அறிந்து நுண்மாணுழைபுலமுடைய அறிஞர்களுடைய அறிவில் எவ்வாறு நிற்றல்கூடும்? இவ்வாறு அகச்சான்றுகளையும் புறச்சான்றுகளையும் எல்லாம் நமது நாட்டில் பற்பல காலங்களிலும் பற்பல இடங்களிலும் பற்பல நூல்களிலும் அமைத்து வைக்கிற தற்கு வேண்டிய ஏராளமான பணச்செலவு யார் செய்தார்கள்? இவ்வாறு பணச்செலவு செய்து அமைத்து வைத்ததற்கு அவர்களுக்கு இருந்த கருத்து என்ன? இந்த அகச்சான்றுகள் புறச்சான்றுக ளெல்லாம் பெரியபுராணம் கூறுகிற அடியார்கள் வரலாற்று நிகழ்ச்சிகளின் உண்மையைக் காட்ட நமக்குப் போதுமான அடையாளங்களாகத் தெரியவில்லையா? அவைகள் நமது அறிவிற்கு விளங்கவில்லையானால் தெரிய முயலாமலும் நாம் நமது தமிழ் முன்னோர்கள் நமக்குச் செய்துவைத்த நன்றியை மறந்தும் அவர்களைத் தாயைப் பழிப்பதுபோலப் பழித்தும் நாம் அடையப்போகும் கதி என்ன?

மூவர் தேவாரங்கள் சாதாரண மக்களுக்கு அருட்பாடல் களாகத் தோன்றாது ஆயினும், அவைகள் புலவர்களான் பாடிவைக்கக் கூடியனவா? உயர்ந்த தத்துவ உண்மைகள் அடங்கிய அப் பாடல்களை யாராலே பாடிச் சான்றுகளாக வைத்தல் முடியும்?

பெரியபுராண வரலாறுகள் நமது சாதாரணமான அறிவுக்கு விளங்கவில்லையே என்றால் அதற்குக் காரணங் கூறுதும். சைவசமய உண்மைகள் தமிழ்மொழி சம்பந்தப்படடமட்டும் தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமறை நூல்களிலும் பதினான்கு சைவசித்தாந்த நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. பெரிய புராண நூல் பன்னிருதிருமுறை நூல்களில் ஒன்று சைவ சமயத் தத்துவ உண்மை இலக்கணங்களுக்குப் பெரியபுராண வரலாறுகள் இலக்கியமாக அமைந்துள்ளன; அவைகள் தத்துவ உண்மைகளை விளக்கிக் காட்டுகிற படம் போன்றுள்ளன. இப்பொழுது பெரிய புராணத்தைப் படிக்கிறவர்கள் பெரும்பான்மையும் சைவ சமய

உண்மைகளை அறியாமலிருப்பதனுல் உண்மைகளுக்கும் அடியார் வரலாறுகளுக்குமுள்ள பொருத்தங்களைக் காண்கின்றுர்களில்லை. அதிலும் இப்பொழுது பெரியபுராணத்தைப் பழிக்க முற்பட்டு வந்துள்ளவர்கள் சைவசமய உண்மைகளை அறிந்து ஆராயாம லிருப்பதுடன் அதில் குற்றங்கண்டு பிடித்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன் படிக்கிருர்கள். மஞ்சள் காமாலைக் கண்ணுடைய ஒருவனுக்குப் பார்க்கிற பொருள்களெல்லாம் மஞ்சளாய்த்தோன்று தல்போல அவர்களுக்குப் பெரியபுராண வரலாறுகளெல்லாம் போலிக்கதைகளாகவே தோன்றுகின்றன. மஞ்சள் நிறமாய்ப் பொருள் தோணுதல் கண்ணின் குற்றமாயிருத்தல் போலப் போலித் தோற்றமும் அவர்கள் அறியாமையின் குற்றமே. கண் ணின் குற்றம் பொருள்களிற் றேன்றுதல்போல காமம் வெகுளி மயக்கங்களில் ஈடுபட்டு உழலுகின்ற குற்றங்களையுடைய மனக் கண்ணின் குற்றம் அவர்களுக்குப் பெரியபுராண வரலாறுகளில் தோன்றுகின்றன. அருட்கண் கொண்டு அறிகிற பெரியபுரா ணத்தை மருட் கண்கொண்டு எப்படி அறிதல் கூடும்? தத்துவ நூல் வல்லா னெருவனுடைய அரிய பெரிய அறிவையும் பண்பை யும் அவ்வறிவும் பண்பும் சிறிது மில்லாத ஒருவன் எப்படி அறிய முடியும்? மருட்கண் பார்வையில் பெரியபுராணம் அறியப் படாமலிருப்பது வியப்பன்று. மருட் கண்ணுடையவர்கள் தங் கள் அறியாமையை அறியாது பிறமக்களுக்குப் பெரிய புராணம் பொய்க்கதை நூல் என்று அறிவிக்க வந்த அறிவே வியப்பினும் வியப்பாயுள்ளது.

பெரியபுராண வரலாறுகள் பொய் என்ருல் அவ் வரலாறுகள் எந்தத் தத்துவ உண்மைகளை விளக்கிக் காட்டுகின் றனவோ அந்தத் தத்துவ உண்மைகளும் பொய்யாகவே யிருத்தல் வேண்டும். ஒன்றைப் பொய் என்று கூறி மற்றென்றை உண்மை என்று கூறுதல் ஒவ்வாக் கொள்கையாகும். ஆதலின் பெரிய புராணம் பொய் என்று சைவப் பொது மக்களுக்கு அறிவிக்க முற்பட்டு வந்தவர்கள் சைவசமய தத்துவஉண்மைகளையும் பொய் என்று மறுத்தல் வேண்டும். பத்திரிகைகளில் பெரியபுராண வரலாறு

கள் பொய் என்று பலவாறு மனம்போன போக்கில் எழுதுவதில் என்ன அறிவுத்திறன் உளது? தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் பேசுகிறவன் சண்டைப் பிரசண்டன்தான். ஒரு சைவசமய அறிஞர் அவையில் அவர்கள் வந்து சைவசமய உண்மைகளையும் அவைகளுக்கு இலக்கியமாய் அமைந்திருக்கிற பெரிய புராண வரலாறுகளையும் பொய்யென்று தருக்கப் பிரமாண வாயிலாகக் காட்டி நிலைநிறுத்துவார்களானல் அவர்களுடைய அறிவின் திறனும் வீரமும் விளங்குவதாகும்.

சைவ சமய அறிஞர்களே! பெரிய புராணம் பொய் என்று கூறும் அறியாமைக் கூற்றுக்களினுல் சைவ சமய உண்மைகளை நன்கு அறிந்த தங்களைப்போலுள்ள அறிஞர்கள் சிறிதும் மயங்கார்கள். சைவ சமய உண்மைகளை நன்கு அறியாதிருந்தாலும் "அவைகளை அறியாத நமக்குப் பெரியபுராண வரலாற்றுகளின் உண்மைகள் முற்றிலும் விளங்காததனுல் அவைகளைப் பழித்தல் கூடாது" என்ற மன அமைதியுடையவர்களாய்க் கடவுளிடம் அன்பு செய்கிறவர்களும் அக்கூற்றுகளினுல் மயங்க மாட்டார்கள். சமய அறிவும் உணர்ச்சியும் ஒழுக்கமு மில்லாதவர்களும் மேற்கு நாட்டு நாகரீக வாழ்வில் மயங்கி யுள்ளவர்களுமாகிய ஆங்கிலம் கற்றவர்களும் தமிழ்க்கல்வி வடமொழிக்கல்வி நன்கு பயிலாதவர்களும் கல்வி அறிவு இல்லாதவர்களுமாய் நமது நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்கள் இந்தப் புதிய கிளர்ச்சி அலையில் அகப்பட்டு மயங்கித் திரிபு உணர்வை அடையாதிருக்கும்படி நாம் சைவப் பொதுமக்களுக்கு உணர்த்துதல் நமது கடன் என்று எண்ணி அக்கடனைப் பத்திரிகைகளில் எழுதுதலினுலும் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதலினுலும் சொற்பொழிவு செய்தலினுலும் ஆற்றி வரும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

---

# புகழேந்தி - செந்தமிழ் நாடகம்

(இதன் உரிமை ஆக்கியோற் குரியது)

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

## இரண்டாவதங்கம் - மூன்றுங் காட்சி

**இடம்:**—சோணாட்டுச் சிறைக் கூடம்

**காலம்:**—நண்பகல்; நடர் - புகழேந்தி, ஆறுமுக வேளான், கருப்பனாசாரி, கண்ணன், வெள்ளையனாசாரி, நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணாசாரி, அறப் பெருஞ்செல்வன்.

(ஆறுமுக வேளான் முதலிய வெழுவரும் துயருடன் ஒருபுறம் நிற்க)

(நேரிசை யாசிரியப்பா)

**புகழேந்தி** :—(தோன்றித் தனி மொழியாய்க் கூறல்)
என்னே ! என்னே ! இவ்வர சாட்சி !
மின்னே ருலகில் விளங்குங் கொலைபழி
கொண்டவர்க் கன்றோ கொடுஞ்சிறைக் கூடம்?
குண்ட னென்பாற் கண்டதென்? புதிதாய்
வந்திடு மணிய நந்திடு "நெருப்பைக்
கட்டிக் கொளுத்தினன்," எனும்பழ மொழிக்குச்
சுட்டுப் பொருளாய்த் தோன்றிய கூத்தன்,
அரச னிலையை யடைந்ததாற் றன்னையே
மறந்தனன் போலும், ஆயினும், மதியிற்
பொருந்திய கல்வியும் போயது யாண்டோ ?
வருந்தியு நேரிற் கண்டிட விழைந்து,
பொருந்தின னிலையே. புவியர சதனைக்
குரக்கின் கையிற் கொடுத்திடு பூந்தார்
புரையக் கொடுத்த வரையன் மதியை
யென்னெனப் புகல்வது ! அவன்தா னென்ன
செய்வான் ? புலவரிற் சிறப்பனுந் தனது
கைபோல் பவனுங் கல்விபா சிரியனு

மாகிய விவனை யன்றியே யெவரை
யரசக் கட்டிலி லமர்த்துவன்? அன்றியும்,
உரைசெயி னூழ்வினை யூட்டிய படியே
புரிந்தனன் கூத்தன் பொல்லாங் கவன்பா
லோதிடற் சாலவு மொண்ணு தந்தோ!

(ஆறுமுக வேளான் முதலியோ ரிருக்குமிட நோக்கி)

என்னை யன்றி யிச்சிறை யகத்தே
யின்னுஞ் சிலரு மிருக்கின் றனர்போற்
காண்கிற தையோ! அவர்களுங் காட்சியின்
மாண்புடை மக்களாய்க் காண்கின் றனரே.
இவர்களு மெனைப்போற் றெளிவிலா வியற்றுந்
தவறுடை யாட்சியாற் றடுக்கப் பட்டனர்
போலும்; அவர்களைப் பார்த்துப் புரிகுவன்.

(அவர்களை நோக்கிச் செல்ல)

ஆறுமுகவேளான் :—(மற்றவர்களை நோக்கி)

அண்ணன் மார்களே! அதோ! பா ருங்கள்!
கண்ணனை நிகர்த்த காளைய ரொருவர்
நமைப்போ லிங்கு நண்ணினர் ஆனல்,
உண்மையிற் பெரிய வொருகவி போன்றே
திண்மையாம் பார்வை செப்பிடல் காண்மின்
அவரு நமையே யண்மிவரு கின்றார்.
கவரு மெழினடை காணுந் தோறும்,
அன்பு நண்பு மகத்திடை முளைத்தே
யின்பா மவர்மொழி கேட்பதற் கென்செவி
விழைகின்ற தவருடை மெல்லரு ணோக்கம்
பழையதோர் நண்பரைப் பார்ப்பது
யிருப்பதைக் காண்மின். [போன்றே

(புகழேந்தி அவர்களை நெருங்க, அவரை நோக்கி)

எம்பெரு மானே
வருக வருக வணங்கினேம் நும்மை.

(எழுவரும் வணங்க)

**புகழேந்தி:**—(அவ்வெழுவரையும் நோக்கி)

வணக்கம் மிகப்பல; இணக்கமா முமக்கே,
தந்தனன் தவநனி நொந்திடு முளத்தீர்!
நன்முகக் குறியு நன்மைசான் மொழியுஞ்
செம்மைசால் பணிவுஞ் செறிந்திடு முங்களைச்
சான்றோ ரினத்திற் சார்த்திநற் கரியாய்,
ஊன்றியே கூறிட, வொடுங்கியிச் சிறையகஞ்
சேர்ந்ததென்?

**ஆறுமுகவேளான்:**— பெரியீர்! சிவபெரு மானே
நேர்ந்தா லொத்த நேர்மைபாந் தாமே
யிவண்புக நேரின், எங்களை யொத்த
சவங்களி னிலைமை சாற்றவும் வேண்டுமோ;

**பெருமாள் பிள்ளை:**—கலைமகள் படிந்த காட்சிவிட் டகலா
நிலைகொள் பார்வை நேர்த்தியை யுடையீர்!
திருவுளங் கருதிய வணமே சிறியேம்
பெருமையி லொருசிறி துடையேம்; ஆயினும்
வயிற்றின் கொடுமைபான் மதியினை யிழந்தேம்.

**புகழேந்தி:**—வயிற்றின் கொடுமையா! அதனால், வழிப்பறிச்
செயனேர்ந் ததுவோ?

**வேள்ளையனுசாரி:**— சீ! சீ! அப்படிச்
செயவிலை பாழுங் கருப்பா லகவிலை
யேறிட வெங்கள் பிழைப்பெலா மிழுக்கி
மாறிட லானது.

**புகழேந்தி:**— மாறிட! என் செய்தீர்?

**கண்ணன்:**—செய்ததென்! தீங்காஞ் செயலொன் றுமின்று
உய்வினை வேண்டி யுண்மையி லறிந்த
கல்வியைக் கொண்டு குடிகளின் கடைதொறும்
பல்லினைக் காட்டி நயமொழி பகர்ந்தே
"ஏற்ப திகழ்ச்சி," எனுமொழி துறந்தே
யேற்கத் தொடங்கினேம் இதுதா னெஞ்செயல்.

**கல்லான்:**—ஆமாம், பெரியீர்! அதுதா னெங்களைத்
திருட்டுப் புலவனுஞ் செயலினிற் சேர்த்தே
யுருட்டிய திந்த வொருபெருஞ் சிறைக்கே.

**கருப்பனுசாரி:**—சிறையுடன் றீர்ந்தாற் றெம்புட னிங்கு
கிடைக்குங் கஞ்சியைக் கேடொன்று மின்றிக்
குடித்தே குடிசையிற் கொல்லும் பசிப்பிணி
யடுத்திடா திருப்பேம். அங்ஙன மன்றி
நவராத் திரியிலே நம்மூர்க் காளி
கோவிலி லெம்மைக் கொண்டுபோய் நிறுத்திப்
பலியிடத் துணிவாம் பலிக்குமுன் நாங்கள்
கிலிகொளக் கேள்விகள் கேட்கப் படுவெமாம்
விடையிறுப் பவர்கள் மீள்வராம் மற்றோர்
படையினுற் றுணிக்கப் படுவராம் எங்களைக்
காப்பது தெய்வக் கடமையாம்; பெரியோய் !

**புகழேந்தி:**—(தனக்குள்)

இஃதென்! கொடுமை! இயம்பொணுப் பழியே!
அஃதைகள்! அந்தோ! அத்துடன் கொடுங்கொலே!
"நரிக்குப் பட்டங் கட்டினுல், நாட்டில்
வரிக்குமேற் கிடைக்கொரு மையாடு வேண்டும்,"
நடைபோ லன்றோ கூத்தன் ஆட்சி
நடைபெறு கின்றது? நாமிவ னுக்குப்
படிப்பினை யொன்று புகட்டியே படிந்த
தடிப்பினை யொழியத் தடிந்திடல் வேண்டும்.

**புகழேந்தி:**—(வெளிப்படை)

உடற்பிறப் பனைய வுயர்நட் பாளர்காள்!
கடமையை முடிக்கவே கடவுள ரென்னை
யனுப்பின ரீங்கே; அலக்கண் வேண்டாம்.
பனுவல் பலவறி பண்புடை யோனெனக்
குறும்புகள் பலசெய் கூத்த னும்மை
யெறும்பின மெனவே யெண்ணினன் போலும்

ஆயினும், அவன்கருத் தழிவது திண்ணம்.
பாயிரம் பலவென்? பாண்டிநன் னாட்டின்
அரண்மனைப் புலவனை யறிவிர்கொல்?

**கண்ணன்:—** ஆ! கா!

அறிவோம் அவர்பெயர் புகழேந்தி யன்றோ?
கல்வியிற் பெருங்கடல்! காட்சிக் கெளியன்!
நல்லறி வினிலோ நலமிகு வியாழன்?
ஆனால், நேரி லறியும் பெருமை
தேனார் மொழியீர்! செய்தே மில்லை.
அன்னார் தம்மை யறியுமோ திருமுன்?

**ஆறுமுக வேளான்:—** அண்ணால்! இவரே, அவரென் றெனக்கோ
ரெண்ணமொன் றெழுகிற(து). இவரே யவர்காண்.
(புகழேந்தியை நோக்கிக்கொண்டே)
கண்ணு முகமுங் கருத்திடை யுள்ளதைப்
பளிங்குபோற் றெரித்திடல் பார்மின்! பகர்ச்சித்
தெளிவே யிவரெனச் செப்பிய துணர்மின்!

**அங்கணனாசாரி:—** அப்படி யாயின், இப்புகழ் மலையே
யெப்படி யுந்நமைத் தப்பிட வைக்கும்.

**புகழேந்தி:—** ஆமாம், யானே, அப்புக ழேந்தி,
ஏம முறுவீர் எண்ணம் விடுமின்!
நவராத் திரிவிழா நணுகிட வின்னும்,
தவமா மாறு தண்மதி வேண்டும்.
அதற்குள், நீவிர் அரும்பாடு பட்டு
மொழியியல் பொருளியல் பாவியன் முறையே
தெளிந்திடல் வேண்டும் ஒழிந்திடு துந்துயர்.
ஒட்டக் கூத்தனை யுலகெலா மறிய
மட்டந் தட்டி மடக்கலாம்; மதிவலீர்!

**பெருமாள் பிள்ளை:—** ஐயமென்? தங்க ளருண்மட்டு முண்டேல்,
பையலிக் கூத்தனைப் பதறவே யடிப்பேம்
வெண்டா மரையாள் விரும்பிவந் நடையுங்

தண்டமிழ்ப் புலவீர்! தாங்களு மிங்கு
வந்திட நேர்ந்ததென்?

**புகழேந்தி:—** வளவர்கோன் வாயிற்
புலவனு யிருக்கப் பாண்டியன் புகன்ற
நலமொழிப் படியே நண்ணின னின்று
கெட்டகா லத்தாற் கெடுமதி பூண்ட
வொட்டக் கூத்தன், உங்களிக் கட்டை
போக்குதல் விரும்பிய போத னுணையாற்
போக்கினன் சிறையில் புகுந்தனன் வந்தேன்.

**அறப்பெருஞ் செல்வன்:—**(தோன்றிப் புகழேந்தியை நோக்கி)
ஒப்பிலாப் பெரியோய்! உண்டிட உணவு
செப்பமா யிற்று திகழ்ந்திடு மட்டில்
புகுந்திட வேண்டினன்.

**புகழேந்தி:—** புகன்றிடு மடுக்களை
புகுந்திட யாண்டு?

**அறப்பெருஞ் செல்வன்:—** புலவர்கண் மணியே!
தென்பா கத்திற் றிகழ்ந்திடு கின்றது
அன்பா யடியே னழைத்துச் செல்வல்
எழுந்தரு ளிறைவ!

**புகழேந்தி:—**(மற்றவர்களைச் சுட்டி) ஆனல், இவர்கள்?

**அறப்பெருஞ் செல்வன்:—**பின்னு லழைக்கப் பெறுவர்.

**புகழேந்தி;—** அஃதென்?
நன்னு வலரிவர் நலிந்திடப் பசியான்
முன்னு னுணவுண்ண முன்னேன். அன்றியும்,
இவர்களு மெனைப்போ லெல்லா விதத்திலும்
முறையே நடத்தப் பட்டா லல்லது
பெரியோய்! உணவுணும் பெற்றியிங் கில்லை.

**அறப்பெருஞ் செல்வன்:—**சிறியோய்; அங்ஙனஞ் செய்யக் கட்டளை
யிலையே! என்செய்வன்?

புகழேந்தி:— எவரது கட்டளை?

அறப்பெருஞ் செல்வன்:—மலைநிகர் கூத்த மன்னவ ரதுவே.

புகழேந்தி:—மன்னவ னவனு? மறந்தனை மிகுதியும்.
ஒட்டக் கூத்த னெனவே யுரைத்திடு
கெட்டனன், அவனு மெனைப்போற் கீழ்மையா
மிச்சகம் பேசும் பச்சைப் புலவனே.
அரசன் வந்தபின், அவனிலை யறிவன்.

அறப்பெருஞ் செல்வன்:—இருக்கலாம்! ஆயினும் எளியேம் யாரும்
தலைமையாய் வந்தால் அவர்களே தலைவராய்க்
கொண்டிடல் வேண்டும், கும்பிடல் வேண்டும்
அன்றெனிற் பிழைப்பு நின்றிடா தகலும்.

புகழேந்தி:—ஆம், அது வாய்மை ஆயினும், இவர்களை
யாம்வகை நடத்தியென் னுடேவே யமர்த்தின்
வருங்கே டொன்று மின்றும் முடிவிற்
பெரும்புக ழுடைவாய் பேதாய்! என்மொழி
நேர்மையாம், நம்பு.

அறப்பெருஞ் செல்வன்:— நிலந்திகழ் புலவீர்!
அப்படி யாகுக. ஆனல்,என்னைக்
காட்டிக் கொடுத்திடல்; கழகமார் பொருளே!

புகழேந்தி:—காட்டிக் கொடுப்பதா? கழறினை நன்கு!
செய்ந்நன்றி கொல்லுஞ் சிறுமக னீங்கிலை.
(மற்றவர்களை நோக்கி)
செல்வோம் யாவருஞ் சீரிதே
கல்வியின் செல்வி களிப்பினை யெய்தவே.

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது.)

---

## சைவப்பெரியார் பிரிவு

திருவாளர் ம. ரா. குமாரசுவாமியா பிள்ளை அவர்கள் காலம் சென்றதைப்பற்றி இச்சங்கத்தார் மிக்க அநுதாபப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் அநுதாபத்தைத் திருவாளர் ம. ரா. குமாரசுவாமியா பிள்ளை அவர்களுடைய குடும்பத்திலுள்ள மனைவியார் அவர்களுக்கும் மக்களுக்கும் தெரிவிக்கிறார்கள்.

திருவாளர் ம. ரா. குமாரசுவாமியாபிள்ளை அவர்கள் எங்கள் சைவ சித்தாந்தச் சங்கக்கூட்டத்தில் பல முறை வந்து சொற்பொழிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் தென்னாட்டிலுள்ள பல சைவக்கழகங்களுக்கும் பிறகழகங்களுக்கும் சென்று சொற்பொழிவுத் தொண்டு ஆற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் தமிழ் உலகத்துக்கும் சைவ உலகத்துக்கும் செய்த அருட்டொண்டு போற்றற்பாலது. அத்தொண்டு செய்தற்கு அவர்களுடைய இடத்தில் வேறொரு தொண்டர் கிடைப்பது அருமை.

அவர்களுடைய ஆன்மா இறைவனது அடிநிழல் அடைந்து சாந்தி பெறுமாறு இச்சங்கத்தார் திருவருளை வேண்டிக்கொள்கிறார்கள்.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார்

## மதிப்புரை

**மநுநீதி சதகம்:** இஃதொரு செய்யுள்நூல். இதன் ஆசிரியர் திருவெண்ணெய் நல்லூர் இராசப்ப உபாத்தியாயரவர்கள். செய்யுள் தமிழ்ச்சுவை யுள்ளது; அரிய சில அறநெறிகளை விளக்குகின்றது. செய்யுள்கள் புதிய முறையில் அமைந்து அழகாகப் பதிக்கப்பட்டிருக்கின்றன.

விலை அணா - 8.

**நீதிவாக்கிய மஞ்சரி:** இதன் கண் உ௱அ - நீதிகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. நீதிகளெல்லாம் எல்லாராலும் அறிதற்குரியனவே. தொகுத்தவர் மழவை மகாலிங்கையரவர்கள். திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்களாற் பார்வையிடப்பட்டுள்ளது. விலை அணா - ௬.

**திரிகடுகம் விருத்தி யுரை:** இதன் ஆசிரியர் சோடசாவதானம் திருவாளர் சுப்பராய செட்டியாரவர்கள்; திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்கள் பார்வையில் நல்ல பதிப்பாய் வெளிவந்திருக்கின்றது.

விலை அணா - ௬.

இவை மூன்றும் ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை நெ. 4/34, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க் டவுன் (P.o.), சென்னை என்னுமிடத்திற் கிடைக்கும்.